## இயல் 3

# கோட்பாடுவழிப் பெண்ணியம்



# இயல் 3
# கோட்பாடு வழிப்பெண்ணியம்

3.0 முன்னுரை

3.1 பெண்ணியக் கோட்பாடுகள்

3.2 வகைகள்

3.2.1 நிலை

3.2.1.1 பண்பாட்டு நிலை

3.2.1.1.1 சமயப்பண்பாட்டு நிலை

3.2.1.1.2 சமூகப் பண்பாட்டு நிலை

3.2.1.2 சமத்துவ நிலை

3.2.1.2.1 உணர்வு நிலைச் சமத்துவம்

3.2.1.2.2 கல்வி நிலைச் சமத்துவம்

3.2.1.2.3 வேலைவாய்ப்புச் சமத்துவம்

3.2.2 அதிகாரம்

3.2.2.1 குடும்பத்தில் அதிகாரம்

3.2.2.2 சமுதாயத்தில் அதிகாரம்

3.2.3 தன்னாட்சித் தனிமை

3.2.3.1 கருத்தியல் சுய ஆட்சி

3.2.3.2 சொத்துரிமைச் சுய ஆட்சி

3.3. தொகுப்புரை

# இயல் 3

# கோட்பாடு வழிப்பெண்ணியம்

## 3.0 முன்னுரை

‘கோட்பாடு வழிப்பெண்ணியம்’ என்ற தலைப்பிலான இவ்வியல் பெண்ணியக்கோட்பாடுகள் குறித்த கருத்துக்களும் அதன்வழியிலான, பெண்ணியம் தொடர்பான சிந்தனைகளையும் ஆய்வு செய்வதாக அமைந்-துள்ளது.

உலகம் முழுவதும் பெண்ணிய இயக்கங்கள் பல பரிணாமங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன. பெண் விடுதலை குறித்தும், பெண்களுக்கான உரிமைகளைப் பெறுவது குறித்தும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்கின்றன. அதன் மூலம் வட்டார அளவிலும், சமுதாய அளவிலும் பெண்களுக்கான தேவைகள் என்ன என்பது பற்றிய அறிவைப் பெறுவதற்கான முயற்சிகளை பெண்ணிய இயக்கங்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. தனி ஒரு பெண்ணின் உளவியல் சார்ந்த உணர்வுகளும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

சமுதாயம் முழுவதும், ஒவ்வொரு பெண்ணின் உணர்வும் மதிக்கப்பட வேண்டும் என்பதைப் பெண்ணிய இயக்கங்கள் வலியுறுத்து-கின்றன. அதே வேளையில் பெண்களுக்கான கடமைகளையும், பொறுப்பு-களையும் இந்தப் பெண்ணிய இயக்கங்கள் கண்டறிந்து அவற்றைப் பெண் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றன. உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் பெண்ணிய இயக்கங்கள் உள்ளன. அவை அந்தந்த நாடுகளுக்கு ஏற்றார்போல் கொள்கைகளையும், போராட்டத் தன்மையையும் கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஆனாலும் உலகப் பெண்ணிய இயக்கங்கள் அனைத்தும் முக்கிய அம்சங்களில் பல பொதுத்தன்மையையும் கொண்டிருப்பதை

அறியமுடியும். இதன் அடிப்படையில் உலகப் பெண்ணிய அமைப்புகள் ஒன்றுடன் ஒன்று இணைப்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளன.

பெண்ணிய இயக்கங்கள் பெண்களுக்குத் தேவையானவைகளாகக் கல்வி, வேலைவாய்ப்பு, சமத்துவம் ஆகியவற்றை முதன்மைப்-படுத்துகின்றன. இத்தளங்களில் போராட்டங்களின் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களையும் பெண்கள் பெற்றுள்ளார்கள். பல நூறு ஆண்டு-களுக்கும் முன்பாகவே பெண்கள் கல்வியில் சிறந்து ஆசிரியர்களாகவும் பணியாற்றிவந்துள்ளனர்.

## 3.1 பெண்ணியக் கோட்பாடுகள்

பெண்ணிய இயக்கங்கள் கொண்டுள்ள கொள்கைகளும், அதன் போராட்டத்தளங்களும், விடுதலை குறித்த உணர்வுகளின் வெளிப்-பாடுகளுமே பெண்ணியக் கோட்பாடுகளாக விளக்கப்படுகின்றன.

“பெண்ணியம் என்பது பல்வேறு கோட்பாடுகளைப் போல், பெண்ணியவாதத்தின் தத்துவார்த்த அல்லது கருத்தியல் ரீதியான தளத்தை ஒரு தனிக்கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து பெற்றுக்கொள்ள வில்லை”.[1] எனவே இப்பெண்ணியக் கோட்பாடுகள் உலகம் முழுமைக்குமான நிலைத்-தன்மையைக் கொண்டிருக்கவில்லை. இதனால் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றாற்போல் பெண்ணியக் கோட்பாடுகள் மாற்றம் கொள்ளத்தக்கதாக இருக்கும் என்பது பெண்ணிய ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆனால் இதற்கு மாறுபட்ட கருத்துகளும் ஆய்வுகள் மூலம் முன்வைக்கப்படுகின்றன. பெண்ணிய இயக்கங்கள் தோன்றிய காலம் முதல் உலகம் முழுமைக்கும் ஆண்களுக்கு இணையான சமத்துவத்தைப் பெறுவதை முதன்மையான கொள்கையாகக் கொண்டுள்ளன.

பெண்ணியக் கோட்பாடுகள் பற்றிய கருத்துகள் பல உள்ளன. பெண்கள் பற்றிய ஆய்வு மூன்று கருத்துக்களை முன் வைக்கின்றன. அவை பெண்களைப் புரிந்து கொள்ளுதல், விழிப்புணர்வு கொள்ளச் செய்தல், அதை செயல்முறைப் படுத்துதல் என்பனவாகும். அவ்வாறு புரிந்து கொண்டு

செயல்படுவதன் மூலகமாகவே பெண்களின் நிலையை உயர்வடையச் செய்ய முடியும்.

பெண்ணியக் கோட்பாடுகள் பற்றி அறிஞர்கள் பல கருத்துகளை தெரிவித்துள்ளனர். அவைகள், “நிலை அல்லது அந்தஸ்து (Status) அதிகாரம் (Power) தன்னாட்சித் தனிமை அல்லது சுயாட்சி (Autonomy) ஆகியவை அக்கோட்பாடுகள் ஆகும்”.[2] இக்கோட்பாடுகளின் அடிப்-படையிலேயே உலகம் முழுவதுமான பெண்ணிய இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

## 3.2 வகைகள்

மேலை நாட்டுப் பெண்ணிய இயக்கங்களின் தாக்கம் இந்திய பெண்ணியத்தின் மீதும் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்திய பெண்விடுதலை இயக்கங்கள் புது எழுச்சியும் பெற்றுள்ளன. இதனால் இந்தியப் பெண்ணியக் கோட்பாடுகளும் உலகம் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. கோட்பாட்டு வழிப் பெண்ணியம் என்னும் இவ்வியல்

1. நிலை
2. அதிகாரம்
3. தன்னாட்சித் தனிமை

ஆகிய மூன்று கோட்பாடுகளில் உலக அளவில் கூறப்பட்டுள்ள கருத்துகளும் தமிழ்க் கவிதைகளில் கூறப்பட்டுள்ள கருத்துகளும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 3.2.1 நிலை

சமுதாய அமைப்பில் பெண்களில் நிலை, தொடக்க காலம் முதல் தாழ்ந்த நிலையிலே இருந்து வருகின்றது. இதனால் பெண்கள் கீழ்ப்படியும் எண்ணம் கொண்டவர்களாக மாறிப்போனார்கள். ஆணாதிக்கச் சமூகத்தால் பெண்கள் அடக்கிவைக்கப்பட்டார்கள். அடக்கு முறைகளையும் அநீதிகளையும் பெண்கள் மீது சமூகம் பலவந்தமாகத் திணித்து வந்தது. இதனால் பெண்கள்

உடல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் சக்தியற்றவர்களாக ஆகிவிடு-கின்றனர். அவர்கள் மீது ஏவப்படும் அநீதிகளை மனரீதியாக எதிர்க்கும் தன்மையற்றவர்களாக ஆகிவிடுகின்றனர். மேலும் அவர்கள் மீதான அநீதிகளை இனம் கண்டுகொள்ளும் தன்மையும் மறந்து இவை பெண்ணினத்திற்கான துயரங்கள் என ஏற்றுக்கொள்ளும் மனநிலைக்குப் பெண்கள் மனமாற்றம் பெற்றுவிட்டார்கள்.

பெண்களுக்கு எதிரான சமூக அநீதிகள் இயற்கையாக ஏற்பட்டதல்ல; அவை ஆணாதிக்கச் சமூகத்தால் திட்டமிட்டுக் கட்டமைக்கப்-பட்டவை என்பதை உணரவைப்பதே பெண்ணியலாளர்களுக்கு மிகப்பெரும் சவாலாக அமைந்திருக்க வேண்டும்.

பெண்ணியத்தின் தொடர்முயற்சியில் பெண்கள் மீதான அடக்குமுறைகள் உணரவைக்கப்பட்டன. அதன் பின்னரே அதனை எதிர்க்கும் மனஉறுதியைப் பெற்றார்கள். “பெண்ணடிமைத்தனம் என்பது உலகரீதியான பொதுத்தன்மை வாய்ந்ததாக இருப்பதால்”,[3] இதனை மாற்றும் முயற்சியில் பெண்ணிய இயக்கங்களும் வலுப்பெற்றன. பெண்களின் நிலை, பெண்ணிய இயக்கங்களின் போராட்டங்களால் உடனடியான மாற்றம் எதையும் பெற்றுவிடவில்லை என்பது தான் உண்மை.

மனித வாழ்வியலில் ஒன்றாகக் கலந்துவிட்ட அம்சங்கள் இல்லறம், சமயம், பண்பாடு, அரசு, அரசியல் முதலியவையாகும். சமூகக் கட்டமைப்பில் உள்ள இந்த ஐம்பெரும் அம்சங்களை எந்த ஒரு மனிதனும் இவற்றைத் துறந்து விட்டு ஒரு நொடி கூட வாழ இயலாது. ஆனால் இவை அனைத்தும் பெண்களுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டுள்ளன. மேலும் இவை அனைத்தும் பெண்களுக்கு எதிரான ஏராளமான கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன.

சமுதாயக் கட்டமைப்பில் உள்ள ஐம்பெரும் அம்சங்கள் அனைத்திலும் பெண்களின் நிலை தாழ்வாகவே மதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து பெண்களால் எளிதாக வெளிவர இயலாது.

இதனால் பெண்ணிய இயக்கங்கள் தொடர்ந்து போராடிவருகின்றன. இந்தப் போராட்டங்களின் மூலமாக முழுமையான வெற்றியைப் பெறவில்லை என்றாலும், இந்த இயக்கங்கள் பல குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளன.

பெண்கள் அவர்களின் இன்றைய நிலையில் இருந்து விடுபட்டு வளர்ச்சி பெறவும் இன்னும் உயர்வான நிலையை அடைவதற்கும் பல தடைகள் உள்ளன. அவற்றை வெற்றிகொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வாறான தடைகளில்

1. பண்பாட்டு நிலை
2. சமத்துவ நிலை

ஆகியவை குறிப்பிடத்தக்க தடைகள் ஆகும். இந்த நிலைகள் குறித்த கருத்துகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

### 3.2.1.1 பண்பாட்டுநிலை

பெண்களை முழுவதுமாக அடிமைப்படுத்தும் தளம் பண்பாட்டுத்-தளமாகும். இந்தப் பண்பாட்டுத்தளத்திலிருந்து பெண்கள் இருபத்தியோராம் நூற்றாண்டிலும் கூட முழுமையாக விடுபடமுடியவில்லை என்பது தான் உண்மையாகும். அந்த அளவு கொடூரமாகவும் இறுக்கமாகவும் பெண்கள் மீதான பிடியைக் கொண்டுள்ளது இந்தப் பண்பாட்டுத்தளம்.

பண்பாடு என்பது "சமூகத்தில் மனிதன் பெறக்கூடிய ஆண் பெண் உறவுகளால் கட்டப்பட்ட பாரம்பரிய மனப்பாங்கின் வழி ஏற்பட்ட அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுங்கு, வழக்காறுகள் மற்றும் பிற தகுதிகள் பழக்கவழக்கங்கள் பற்றிய வாழ்க்கை முறையைப் பண்பாடு"[4] எனக் குறிப்பிடுகின்றார் மேலை நாட்டறிஞர்.

இந்தப் பண்பாட்டு அடிப்படையில் ஆண்கள், பெண்களை அடக்கி ஆளுவதை அவனது உரிமை என்று எண்ணுகின்றான். சமுதாயம் பெண்களுக்கு இதுதான் பிறப்பின் விதி என்ற எண்ணத்தைப் பதிவு

செய்கின்றது. இதனால் பண்பாட்டு விதிகளை மீறுவதோ! அல்லது மீற எண்ணுவதோ மிகப் பெரும் சமூகக் குற்றமாகவே கருதும் நிலை இருந்து வந்தது. இதைப் பெண்ணிய இயக்கங்கள் முயற்சிசெய்து மாற்றி வருகின்றன. இதற்காக அறிஞர்களால், பெண்கள் பற்றிய கருத்துகள் மீண்டும் மறுவாசிப்பு செய்யப்படுகின்றன.

பெண்களின் சமூகத்தகுதி நிலைகுறித்து காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தில் உயிர் உற்பத்தி செய்வதிலும் சமூகத்தில் உற்பத்தி சக்திகளை உருவாக்குவதிலும் சுதந்திரமாகவும் சம உரிமை பெற்றும் வாழ்ந்து வந்த பெண்கள் முதலாளித்துவத்தின் போக்கினாலும் தனிச் சொத்துரிமையாலும் துணை-நிலையினராகவும், சார்பு மாந்தராகவும் மாறிப்போயினர் என்று விளக்கு-கின்றார்கள்.

இந்தப் பண்பாட்டு நிலை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை சமயப் பண்பாட்டு நிலை. சமூகப் பண்பாட்டு நிலை என்பனவாகும். பெண்களை அடிமைப் படுத்துவதில் இவை இரண்டும் ஒன்றை ஒன்று மிஞ்சும் வண்ணம் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன, பெண்ணிய இயக்கங்கள் பண்பாட்டு நிலையில் இவை இரண்டையும் எதிர்த்துப் போராடும் நிலையில் உள்ளன.

### 3.2.1.1.1 சமயப் பண்பாட்டு நிலை

பெண்கள் மீது விடுபடமுடியாத அழுத்தமான பிடியைக் கொண்டுள்ளது சமயப்பண்பாட்டுநிலையாகும். இது பெண்களின் கால்களிலும் கைகளிலும் விலங்கிட்டு கட்டுப்படுத்தி வைத்துள்ளது என்றும் கூறலாம். இந்த சமயப் பண்பாட்டுக் கட்டுப்பாடுகளில் இருந்து பெண்கள் எளிதாக வெளிவரமுடியாது. எந்தவித சமரசமும் செய்து கொள்ளாதது சமயப் பண்பாட்டு நிலையாகும் எனலாம்.

உலகம் முழுவதும் இன்றும், மிகவும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது, இந்த சமயப் பண்பாடு, உலகின் எந்த நாட்டிற்கும்

பெண் தலைவராகவோ, அதிபராகவோ ஆகலாம். ஆனால் உலகில் எந்த ஒரு சமயத்திற்கும் ஒரு பெண் தலைமைப் பொறுப்பைப் பெறமுடியாது. அது குறித்து எண்ணவும் தகுதியற்றவர்களாக பெண்களைக் கருதுகின்றன உலகச் சமயங்கள். நீண்ட போராட்டங்களுக்குப் பின்னர், இன்று சில சிறு திருச்சபைகளுக்கு அருட்தந்தை இடத்திற்குப் பரித்துரைக்கப்படுகின்றார்கள். ஆனால், இன்னும் அந்த இடத்தைப் பெறவில்லை எனலாம்.

தமிழ்ச் சூழலில் சங்ககாலம் பெண்களுக்கு சம உரிமை வழங்கிய காலமாக அறியப்படுகின்றது. இந்திய அளவில் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய சமயமாகப் போற்றப்படும் சமயம் வேதசமயம் ஆகும். இந்த வேதசமயக் காலத்தில் பெண்கள் எல்லாவிதமான உரிமைகளையும் பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகின்றது. அக்காலத்தில் சமயச் சடங்குகளில் பெண்கள் ஈடுபட்டனர்; அவர்கள் இல்லாமல் சமயச் சடங்குகள் முழுமை பெறாது என்ற நிலை இருந்தது. “ஆண்களைப் போலவே பெண்களும் தவத்தில் ஈடுபட்டனர். பலசமயங்களில் கடுந்தவம் மேற்கொண்டனர்”.[5]

வேதகாலப் பெண்கள் கல்வியிலும் சிறந்து விளங்கினர். திருமண விஷயத்தில் தங்கள் விருப்பம் போல் மணமகனைத் தேர்வுசெய்யும் உரிமை பெற்றிருந்தனர். இவ்வாறு பெண்கள் சமயநிலையில் ஆண்களைப் போலவே அனைத்து உரிமைகளையும் பெற்றிருந்தனர். வேதகாலத்தில் பெண்கள் பெற்றிருந்த சமத்துவ நிலை சமுதாயம் முழுவதும் நிலவவில்லை. ஒருபுறம் பெண்கள் உரிமைபெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் குறிப்பிட்ட அளவினரே; மற்றொருபுறம் பெண்கள் அடிமைகளாகவும் உரிமையற்றவர்களாகவும் இருந்துள்ளார்கள். மேலும் இந்த வேதகாலச் சமயநிலை உயர்வு பெற்றிருந்த பெண்களின் நிலையும் தொடர்ந்து வரவில்லை. ஆணாதிக்கச் சமுதாயம் சமயச்சடங்குகளில் இருந்து பெண்களை முழுவதுமாக ஒதுக்கியது. அதற்கான அறுகதையற்றவர்கள் என்று பெண்களைக் கீழ் நிலைக்குத் தள்ளியது.

சமயச் சடங்குகளில் பெண்களை மறுப்பதும் ஒதுக்குவதும் நீண்டகாலமாகத் தொடர்கின்றது. இதனால் பெண்ணியப் படைப்பாளர்கள் இந்தச் சமயக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிய முயற்சிக்கின்றார்கள். தேவையானால் அவர்கள் சமயத்தை விட்டும் வெளியேறும் மனநிலை கொண்டவர்களாக மாறுகின்றார்கள். அவர்களது செயலிலும் முயற்சியிலும் முழுமையான நம்பிக்கை கொண்டவர்களாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றார்கள். கவிஞர் அனார் 'கோரிக்கை' என்ற கவிதையில் சமயத்தையும் சமயக்கட்டுப்பாடுகளையும் தனது பாதையில் இருந்து விலகி இருக்கச் சொல்கின்றார்.

*"எனது குரல்*
*தனித்துவமானது*
*என் ஆற்றலும் சிந்தனையும்*
*உறுதியானவை*
*திருத்தச் சட்டங்களாலும்*
*புதிய ஏற்பாடுகளாலும்*
*வேலிகள் விசாலப்படுத்தாமல்*
*விலகி நில்"*[6]

இக்கவிதையில் கவிஞரின் துணிச்சலும் மனக்குமுறலும் வெளிப்படுகின்றன. மக்களுக்கு ஏற்புடையதாக இல்லாத சமயங்கள் சமுதாயத்தில் நீடித்து வளர்ந்ததில்லை. கவிஞரின் கருத்திற்கேற்ப சமயங்கள் அவற்றை மறு-உருவாக்கம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை உணர்த்துகின்றார்.

சமயச் சடங்குகளில் மட்டுமின்றி, இறைவன் உறையும் ஆலயத்தின் பக்கம் கூடச் செல்வதற்கு மாதவிலக்கான பெண்களுக்கு இடமில்லை என்கிறது சமயக் கட்டுப்பாடுகள். இது பெண்ணியலாளர்களைக் கேள்வி எழுப்பத் தூண்டுகின்றது. இது குறித்து தனது மன அழுத்தத்தை 'அகத்திணையில்' பதிவு செய்கின்றார் கவிஞர் கனிமொழி,

*"எந்நாடு போனாலும்*
*தென்னாடு உடைய சிவனுக்கு*
*மாதவிலக்குள்ள பெண்கள்*
*மட்டும் ஆவதே இல்லை"*[7]

கவிஞரின் கருத்தைக் கொண்ட பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்-கின்றது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில். இங்கு கோவில் முழுவதும் பெண்களே அர்ச்சகர்களாக உள்ளார்கள். மாதவிலக்கு காலங்கள் குறித்த கட்டுப்பாடுகள் இங்கு மறுக்கப்பட்டுள்ளன. இது பெண்ணியலாளர்களுக்கு ஆறுதல் தரக்கூடிய செயலாகும்.

வளர்ந்து வரும் இயந்திரமயமான சமுதாயத்தில் சமயங்களும் சமயச்சடங்குகளும் அர்த்தமற்றவையாக மாறிவிடும் என்பதையும் அகத்திணையில் கவிஞர் கனிமொழி பதிவுசெய்கின்றார்.

*"வடநாட்டில் குளிருக்கு*
*கால்சராயும் பூட்சோடும் பூஜாரி*
*மோட்டார் போட்டாகிவிட்டது*
*பெருமாள் கோவில் தேருக்கு*
*திருப்பதிக்குப் போக முடியாவிட்டால்*
*திநகர் கிளையில் காணிக்கை செலுத்தலாம்.*
*மூனுநாள் விரதம்*
*ஐயப்பனுக்குப் போதும்*
*ஹரே ராமாவில்*
*ஆங்கிலேய அர்ச்சகர்*
*இந்தோநேசியக் கோவிலில்*
*செருப்புக் போட்டுக்கொள்ளலாம்*
*கணேசனுக்கும் கோழிக்கறிப் படையல்"*[8]

என்பதன் மூலம் சமயக் கட்டுப்பாடுகளை விமர்சிக்கின்றார். மாறிவரும் சமயச்சடங்குகளைப் போல் பெண்கள் குறித்த சமயக் கட்டுப்பாடுகளையும் மாற்றி அமைக்க வேண்டும் என்பதும் கவிஞரின் கருத்தாகும்.

உறவுகளை நெருக்கமாக இணைக்க சமய விழாக்கள் நடந்தன. ஆனால், அவை இன்று பிறரை அச்சுறுத்துவதற்காக நடத்தும் விழாவாகிப் போனதையும் சமுதாயத்திற்குச் சுட்டிக்காட்டுகின்றார் கவிஞர், தனது அகத்திணையில் விநாயகர் சதூர்த்திக்கு வாங்கிய ஈரமான பிள்ளையார் குறித்து இப்படிக் கூறுகின்றார்.

*"அலங்கார அழகைப் பீற்றிக்கொள்ள*
*அவரை அடுத்த வீட்டுக்கு*
*எடுத்துப் போகையில்*
*வாங்கிய அடியை*
*பூஜை அறையில் சுருண்டு*
*அழுது புகார் செய்து*
*ஐந்து நாள் கழித்து*
*கிணற்றில் போடும் போது*
*லீவுக்கு வந்த*
*சொந்தம் ஊருக்குப் போகும்*
*சோகம் அப்பும்.*
*அடுக்குமாடியில்*
*பிள்ளையார் கரைக்க இடமற்றுக்*
*கடலுக்கு ஓடும்போது*
*பூதாகரமாய் வாளேந்திய*
*பிள்ளையார்கள் பயமுறுத்துகிறார்கள்*
*என் மகனை"*[9]

இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டுப் பெண்ணியப் படைப்பாளர்கள் பண்பாட்டு நிலையில் வெற்றி கொண்டுள்ளார்கள். சமயச்சடங்குகளையும் கட்டுப்பாடுகளையும் உடைத்து வெளிவருகின்றார்கள். அதற்கான மன உறுதியைப் பெற்றவர்களாகப் பெண்ணியலாளர்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றுள்ளார்கள். அதே வேளையில் இன்று சமயங்கள் கட்டுப்பாடுகளை இழந்து தளர்ச்சி பெற்றதாக வலுவிழந்து உள்ளது என்பதும் சமயங்கள் குறித்த ஆய்வுகள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் ஆகும். இந்த நிலையில் பெண்ணியப் படைப்பாளர்கள், சமயம் கொண்டுள்ள பெண்கள் சார்ந்த

கருத்துக்களை மறுகட்டமைப்புச் செய்வதன் மூலம், சமயக் கட்டுப்பாடுகளில் இருந்து பெண்கள் முழுமையான விடுதலையைப் பெறமுடியும் என்று கருத்துரைக்கின்றனர்.

### 3.2.1.1.2 சமூகப் பண்பாட்டு நிலை

பெண்களைச் சமுகப் பண்பாடு ஏராளமான கட்டுக்களைக் கொண்டு கட்டிவைத்துள்ளது. "ஒரு பெண் தனது ஆளுமையைத் தானே உணரமுடியாத நிலையில் உணர்ந்தாலும் வெளிப்படுத்த முடியாத நிலையில் இந்தச் சமூகம் அவளை ஆக்கி வைத்திருக்கின்றது".[10] மேலும் குடும்பம் உறவு என்ற பந்தங்களுக்குள் அவளைத் தள்ளி சிறையில் அடைத்து வைத்துள்ளது, இதனால் "தனக்கென்று தனிவிருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்கும் வாய்ப்பில்லாதவளாகவுமே பெண் விளங்க வேண்டிய-வளாகிறாள்".[11] சமூகம் அவளைச் சுயசிந்தனை அற்றவளாக மாற்றியே நடமாடவைக்கின்றது.

சமுதாய அமைப்பில் பெண் உடைமைப் பொருளாக மாற்றப்பட்டாள். இதனால் பிறர் அவளைப் பார்ப்பதோ, பேசுவதோ ஆணின் மதிப்பைக் குறைப்பதாகக் கருதப்பட்டது. இதனால் பெண் மீதான கட்டுப்பாடுகள் அதிகமானது. சமூகத்தில் குடும்பங்கள் சிறப்புடன் விளங்க வேண்டுமானால் "கணவன் தனது மனைவியின் நடத்தையைக் கண்காணிக்க வேண்டும்"[12] என்பது கட்டாயமாக்கப்பட்டது. மேலும் "நம்பிக்கைக்கு உட்படாத மனைவி மோசமானவள் அவள் குடும்பத்தைக் கலைத்து விடுகிறாள்"[13] என்ற கருத்தும் ஆணாதிக்கச் சமூகத்தால் சமுதாயம் முழுமையும் பரப்பப்பட்டது. இதனால் அவள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டாள்.

பெண்களுக்கு அவளது உடல்ரீதியான தன்மையும் சமுகத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது. இதன் அடிப்படையில் இனங்களின் தோற்றத்தைக் கண்டறிந்த டார்வினும் பெண் குறித்து தவறான கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். "பெண் அதிகப்பட்சமாக மெல்லியல்

தன்மையும் சுயநலமும் கொண்டிருக்கின்றாள்; இருபாலரில் ஆண், பெண்ணைவிட அதிக புத்திக்கூர்மை பெற்றுள்ளான்"[14] என்று கூறுகின்றார்.

உளவியல் அறிஞர் ஃபிராய்டு அவர்களும் பெண்கள் குறித்து மாறுபட்டகருத்தையே பதிவு செய்துள்ளார். "உணர்திறன்களைச் சமூக நலனுக்கு மாற்றும் வகையில் ஆண்களைவிட பெண்கள் குறைந்த செயல்திறம் கொண்ட பலவீனமானவர்கள்"[15] என்று பெண்களை குறைத்தே மதிப்பீடு செய்கின்றார். அறிவியல் அறிஞர்கள், பொருளாதார அறிஞர்கள், புரட்சியாளர்கள் என எல்லோருமே பெண்களுக்கான சமூக அந்தஸ்தை வழங்குவதில் குறைவான நிலையிலேயே மதிப்பீடு செய்தார்கள். இதனால் பெண், அவர்களுக்கான சமூக உணர்வுகளைப் பெறுவதே இயலாத நிலை ஏற்பட்டது. இவ்வாறு இறுக்கமான கயிறுகளால் கட்டப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகளில் இருந்தனர்.

இல்லறத்தில் வாழும் பெண்கள் தங்கள் வீடுகளுக்கு திடீர் என உறவினர்கள் வந்துவிட்டால் அவர்களை வரவேற்கும் உரிமை-யற்றவர்களாவே வாழ்ந்துள்ளனர். இதை சிலப்பதிகாரமும், பெரியபுராணமும் எடுத்துரைக்கின்றது. பெரியபுராணம் காரைக்கால் அம்மையார் புராணத்தில் அவரது இல்லற வாழ்வில் அடியவர் ஒருவருக்கு விருந்தோம்பல் செய்கின்றார். இதில் "கணவனிடம் கனியை அடியவருக்குக் கொடுத்ததைச் சொல்வதற்குக் கூட உரிமை எடுத்துக்கொள்ளாதவராக வாழ்ந்து வந்துள்ளார்"[16] என்பதைக் காணமுடிகின்றது. இறைவனின் அருளால் பெற்ற கனியை சுவைத்த அவரது கணவன் புனிதவதியார் மீது சந்தேகம் கொள்கின்றான். இதை

*"மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலும் அயின்றதனில்*
*உற்றசுவை அமுதினுமேற் படவுளதா யிட இதுதான்*
*முற்றருமாங் கனியன்று: மூவுலகில் பெறற்கரிதால்*
*பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்"*[17]

(பெ.பு.கா.அ.பு.பா. 26)

என்ற பாடலின் மூலம் அறியலாம். "இதனைப் புனிதவதியின் நடத்தையில் கொண்ட சந்தேகமாகவே நாம் கருதலாம்".[18] இவ்வாறு பெண்களை எந்தவித உரிமையும் அற்றவர்களாகவே சமூகப் பண்பாட்டு கட்டுப்பாடுகள் அடக்கிவைத்துள்ளன.

பெண்கள் மீதான இந்தச் சமுதாயக் கட்டுப்பாடுகளைப் பெண்ணியம் மெல்ல மெல்ல உணரத் தொடங்கியது. இதனால் இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து பெண்கள் வெளியேறத் தொடங்கினார்கள்.

*"குத்தின அரிசி ஒரலிலே*
*கொளிச்ச அரிசி முறத்திலே*
*ஆக்கின சோத்துக்கு உண்ணாமை பேசின*
*இந்தாடா மாமா உன்தாலி!"*

என்ற நாட்டுப்புறப்பாடல் சமூகக் கட்டுப்பாடுகளை அழுத்தமான குரலில் சுக்குநூறாக உடைத்தெரிகின்றது. தன்னிச்சையாக விவாகரத்து செய்யும் பெண்ணின் துணிவைக் காட்டுகின்றது இப்பாடல்.

இருபத்தியோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் இந்தச் சமூகக் கட்டுப்பாடுகளை விலக்கிவைக்கின்றது. பெண்ணியப் படைப்பாளர்கள் தங்கள் கவிதைகளில் சமூகக் கட்டுப்பாடுகளை விலக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கவிஞர் அனார் தனது 'வன்மப்படுதல்' என்ற கவிதையில் சமூகக் கட்டுப்பாடுகளை எதிர்த்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

*"சுற்றிவளைத்து*
*வேலி கட்டி*
*அதற்குள் என்னைச்*
*சுவாசிக்கச் சொல்வதுதான்*
*நீ காட்டும் சுதந்திரம்.*
*சுயத்தையெல்லாம்*
*ஒப்படைத்துவிட்டு*

*வைக்கோல் பொம்மையாகி*

*உன் இழுப்புக்கு*

*ஆட வேண்டுமென்றே*

*நீ நினைக்கின்றாய்*

*நீ சொல்வதுதான் வேதம்*

*நீ காட்டுவதுதான் உலகமெனில்*

*எனக்கென்று*

*இதயமும் கண்களும் எதற்கு*"[19]

என்ற கவிதையில் பெண்களுக்கென்று தனியான உணர்வுகளும் உரிமைகளும் உண்டு என்பதைக் கவிஞர் எடுத்துக்காட்டுகின்றார்.

*"சொந்தக் காலில் நிற்கும் அளவில்*

*விந்தை மகளிர் விளங்கினர் இன்றே*"[20]

பெண்கள் சொந்தக்காலில் நிற்கும் தகுதியை பெற்றுள்ளனர். இதனால், பெண்கள் மீதான கற்பிதங்களான புனிதம், ஒழுக்கம், குடும்ப கௌரவம் என்ற கட்டுப்பாடுகளில் இருந்து விலகுகின்றனர். "ஆண்டாண்டு காலமாகப் பெண்களுக்கு அளிக்கப்பட்ட சாபங்களும்சரி, வரங்களும் சரி ஆணுக்குச் சாதகமானதாய், பெண்ணுக்கு வலி இல்லாது சிலுவையறையக் கூடியதாகத்தான் இருந்து வந்திருக்கின்றது"[21] என்ற நிலையை, இன்றையப் பெண்ணிய இயக்கங்கள் மாற்றி அமைத்து வருகின்றன.

### 3.2.1.2 சமத்துவ நிலை

பெண்ணிய இயக்கங்கள் தோன்றி வளர்ச்சி அடைந்த பின்னர் அது பெண்களுக்கான பல உரிமைகளை முன்வைத்துப் போராடி-வருகின்றன. ஆனால் இன்று மட்டுமல்லாது, சமுதாய அமைப்புத் தொடங்கியது முதல் பெண்கள் போராடி வருவதும் ஆணாதிக்கச்-சமுதாயத்திடம் அது எதிர்பார்ப்பதும் சமத்துவம் என்ற ஒரே நிலையைத்தான் எனலாம். "ஆண்மகனுக்குச் சமூகம் அளித்திருக்கும் சிறப்பு உரிமைகளால்

அவன் தன் மனைவியைச் சில ஒழுக்க வரையறைகளுக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றான்".[22] இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து வெளிவருவதுதான் பெண்ணியத்தின் குறிக்கோளாகும்.

சமுதாயத்தில் பெண், ஆண்களைப் போல் சுதந்திரமாக இருக்க-வேண்டும். தோற்றம், செயல், கல்வி, வேலைவாய்ப்பு என்ற அனைத்துத் தளங்களிலும் ஆண்களுக்கு இணையாக எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாமல் உரிமையுடன் வாழவேண்டும் என்பது பெண்ணியவாதிகளின் நோக்கமாகும். இந்த உரிமையை வழங்க ஆண்சமுதாயம் உளவியல் ரீதியாகப் பண்பட வேண்டும். அப்போதுதான் பெண்சமுதாயம் உண்மையான முழுமையான விடுதலையைப் பெறமுடியும். அவ்வாறு இல்லாமல் போராட்டங்களின் மூலமாகவோ, சட்டங்களின் மூலமாகவே பெறப்படும் விடுதலை போலியானதாகவே இருக்கும்; இந்த விடுதலை நிரந்தரமாக நிலைத்தும் நிற்காது.

பெண்ணியம் எதிர்நோக்கும் விடுதலைக்குப் பாலியல் உறவு தடையாக இருந்துள்ளது. ஆனாலும் ஆணாதிக்கம் என்பதை உலகம் முழுவதும் ஒரே தன்மையைக் கொண்டதாகக் கருத இயலாது. "கொள்ளைக் கூட்டத்தார் தோட்டப்பணிபுரிவோர் ஆகியோரது சமூகத்தில் சமத்துவ நிலை பல வகையிலும் நிலவி வந்துள்ளது. மறு உற்பத்தியைப் பெருக்குதல் முடிவெடுக்கும் அதிகாரம் உண்டு. குழுவினுள்ளே எழும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது, நிர்வகிப்பது என சமத்துவம் நிலவி வந்துள்ளதேயன்றி இரு கூறாகப் பிரிந்திருந்த நிலை நிலவிடவில்லை".[23] ஆனால் சமூக அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொள்பவர்களிடமும், உயர்பணி செய்பவர்-களிடமும் இது போன்ற உயர்ந்த மனம் இல்லை என்பது பெண்ணியலாளர்களின் மனக்குமுறலாக வெளிப்படுகின்றது.

உலகப் பெண்ணிய இயக்கங்களைவிட இந்தியப் பெண்ணிய இயக்கங்கள் சமூகத்தளத்தில் ஏராளமானதடைகளைக் கொண்டுள்ளன. பெண்கள் "தவம், நோன்பு நோற்றல், கற்பொழுக்கம் பேணுதல்,

பிராயச்சித்தம் தேடுதல் எனப் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டவர்களாக விளங்கிடவேண்டுமென சமூகத்தால் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்".[24] இவ்வாறான கட்டுகளில் இருந்து பெண்ணியம் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளைத் துணிச்சலாக மீறும் பெண்கள் மீது சமூகம் அவதூறான கருத்துகளைப் பரப்புகின்றது. அவளது ஒழுக்கத்தையும் கற்பு நிலையையும் சந்தேகத்திற்கு உள்ளாக்குகின்றது.

சமுதாயத்தின் அவதூறுகளுக்கும் பொய்யான பழிகளுக்கும் பெண்கள் அச்சமுடையவர்களாக இருக்கின்றார்கள். இதனால் பெண்ணிய இயக்கங்கள் பெண்களுக்கான சமத்துவத்தைப் பெறுவதில் மிகப் பெரும் சவால்களை எதிர்கொள்ளவேண்டியது உள்ளது.

பெண்கள், ஆண்களிடமிருந்து ஆணாதிக்கச் சமூக அமைப்பிலிருந்து சில சமத்துவ நிலைகளை எதிர்நோக்குகின்றனர். பெண்கள் ஆணாதிக்கத் தன்மையிலிருந்து எதிர்நோக்கும் சமத்துவங்கள்,

1. உணர்வுநிலைச் சமத்துவம்
2. கல்வி நிலைச் சமத்துவம்
3. வேலை வாய்ப்புச் சமத்துவம்

என்ற மூன்று உட்தலைப்புகளில் இங்கு விளக்கப் பெற்றுள்ளன.

### 3.2.1.2.1 உணர்வுநிலைச் சமத்துவம்

பெண் இனத்தை ஆணாதிக்கச் சமுதாயம் தன்னைப் போன்றே பெண்களும் மனித இனத்தைச் சேர்ந்தவர் என்று உணர்வுநிலையில் எண்ண வேண்டும். அவ்வாறு இல்லாமல் பெண், ஆண் இனத்திற்காகவும், ஆண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள், அவர்களுக்கெனத் தனியான உரிமைகளோ உணர்வுகளோ இருக்கத் தேவை இல்லை என்ற ஆதிக்க எண்ணமே, ஆண் சமுதாயத்திடம் நிறைந்து காணப்படுகின்றது. பெண்களின்

அவலநிலைக்கு ஆண் சமுகத்தின் இந்த உளவியல் கருத்தே காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

சமுதாயம் பெண்களை அடிமைகளாகக் கருதியது. “அடிமைகள் எவ்வாறு சொத்துக்களாகக் கருதப்பட்டனரோ அவ்வாறே பெண்களும் உடைமைப் பொருளாகக் கருதப்பட்டனர். இதுவே பல்வேறு பிரச்சினை-களுக்கும் காரணமாக அமைந்தது”[25] என்பதை பெண்ணியச் சிந்தனை-யாளரான மேரி ஊல்ஸ் டோன் சிராப்ட் முன் வைக்கிறார். எனவே பெண்களுக்கு “மனித வர்க்கத்தின் கருத்துப்படி சரிநிகர்சமானம் என்கின்ற உணர்வே தலையாயதாக விளங்க வேண்டும்”.[26] அவ்வாறு ஆணாதிக்கச் சமூகத்தால் பெண்கள் நடத்தப்பட்டால் “உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பெண்கள் வலிமை பெற்றுத் திகழும் நிலை ஏற்படும்”[27] எனலாம்.

பெண்கள் “காம இச்சைக்குரிய கருவியாகத் திகழ்வதற்கு முன் பெண் என்பவள் ஒரு மனிதப் பிறவியாக அமைகின்றாள்”[28] என்ற உணர்வுநிலை ஆண்களுக்கு ஏற்பட்டால், பெண்கள் எதிர்கொள்ளும் ஏராளமான பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும். மாறாக ஆண்கள், பெண்களை அடிமைப்படுத்த முயற்சிப்பதால் பெண்கள், பெண்ணிய இயக்கங்களின் துணையோடு ஆண்களின் செயல்களை எல்லாம் தாண்டிச்செல்ல முயற்சிக்கின்றனர். இதன் காரணமாகவே பெண்ணியத்தில் “தீவிர மாற்றங்கள் தோன்றின” சோசலிச உணர்வு, தோற்ற மாற்றங்கள், உடைமாற்றம், நவீன முடியலங்காரம், புகைபிடிக்கும் வழக்கம் போன்ற போக்குகள் தோன்றின”.[29] இவை சமூக மாற்றத்திற்கும் காரணமாக அமைந்தன.

பெண்கள், உளவியல் ரீதியாக பாதிக்கப்படத் தொடங்கியது முதல், தீவிரவாதப் பெண்ணியம் வலுப்பெற்றது. “அத்தீவிரவாதப் பெண்ணியத்தை ஆழ்ந்து நோக்கும்போது ஆணைவிடப் பெண் உயர்வானவள்”[30] என்ற எண்ணம் தோன்றியது. இதன் காரணமாக, ஆண்கள் சமுதாயத்தைவிட்டு நீக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணம்

மேலோங்கியது. இது ஆண்-பெண் இரு பாலருக்கும் உளரீதியான இடைவெளியை அதிகரிக்கச் செய்தது; விரோதத்தையும் வளர்த்தது. ஆனாலும் இந்த உளவியல் குறைபாட்டை நீக்கும் முயற்சி இருபக்கமும் மேற்கொள்ளப்படவில்லை என்பது துரதிஷ்டவசமான உண்மையாகும்.

பாலியல் உறவில் “பாலியல் ரீதியான அடக்குமுறை புறக்கணிக்கப்பட்டு, பாலியல் ரீதியான உழைப்புப் பங்கீடு”[31] என்ற நிலை உருவாகவேண்டும் என்று பெண்ணியம் விரும்பியது. ஆனால் பெண்களை அடக்கியாள ஆணாதிக்கச்சமூகம் பாலியல் உறவையே மூலதனமாகப் பயன்படுத்தியது. இதன் மூலமே பெண்ணைக் கட்டுப்படுத்த முடியும் என நம்பியது. இதனால் பெண்ணியம் அந்தரங்கத்தைப் பகிரங்கப்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டது. ஆண்களிடம் இருந்து முழுமையாகப் பிரிந்து வாழ வேண்டும் எனக் கருதியது. “பெண்களுடன் தான் பெண்கள் பாலுறவு கொள்ள வேண்டும் என்றும் ஆணுடன் பாலுறவு கூடாது”[32] என்றும் தீவிரக் கொள்கையை மேற்கொண்டது பெண்ணியம்.

தீவிரவாதப் பெண்ணியம் “ஒருபால் உறவுகள் என்பன மிகவும் இயற்கையானவையே. இத்தகைய உறவுகள் இயற்கைக்கு மாறானவை அல்ல”[33] என்ற கருத்தைப் பதிவு செய்கின்றன. இதுபோன்ற கருத்துகள் வளர்ச்சிபெற்றால் சமூகம் இன வளர்ச்சியைப் பெறமுடியாது. இதனால் சமுதாயம் பின்னடைவையே சந்திக்கும். இது ஆண்களின் உளவியல் மாற்றத்தால் மட்டுமே நிகழக்கூடியதாக இருக்கும். “ஆணுக்கும் பெண்ணுக்கும் அனைத்து வழிகளிலும் சமத்துவம் வேண்டும். வாய்ப்பும் பயிற்சியும் தரப்பெற்றால், பெண்கள் ஆண்களைப் போலவே எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குவர்”[34] என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணியம் உளவியல் ரீதியான சமத்துவத்தை முதன்மையானதாக விரும்புகின்றது. பெண்கள், உள்ளமும் உணர்வும் கொண்ட சக மனித இனம் என்ற எண்ணம்

ஆண்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதைப் படைப்புகளின் மூலம் வலியுறுத்துகின்றது. ஆண்கள் விரும்புகின்றபோது அவர்களின் உடல் தேவையையும், புறத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரு பொருளாகவோ அல்லது அவர்களது அடிமைகளாவே இருக்க விரும்பவில்லை.

பெண்களின் பணி, ஆண்களுக்கான வாரிசுகளைப் பெற்றுத்தரும் இயந்திரமயமான பணி செய்வதுமட்டுமல்ல என்பதை ஆண் சமுதாயத்திற்கு உணர்த்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

பெண்கள் குறித்து ஆண்களின் பார்வையை தனது கவிதையில் பதிவு செய்கின்றார் கவிஞர் சங்கரி. 'தமிழ் நாவல்களில் பெண்ணியம்' என்ற நூலில் 'ஆண் பார்வையில் பெண்ணும் பெண்ணியமும்' என்ற கட்டுரையில் இடம் பெற்றுள்ள அக் கவிதை,

*"எனக்கு*
*முகம் இல்லை*
*இதயம் இல்லை*
*ஆத்மாவும் இல்லை*
*அவர்கள் பார்வையில்*
*இரண்டு மார்புகள்*
*நீண்ட கூந்தல்*
*சிறிய இடை*
*பருத்த தொடை*
*இவைகளே உள்ளன*
*சமையல் செய்தல்*
*படுக்கையை விரித்தல்*
*குழந்தை பெறுதல்*
*பணிந்து நடத்தல்*
*இவையே எனது கடமைகள் ஆகும்*
*கற்பு பற்றியும்*
*மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்*
*கதைக்கும்*

*அவர்கள்*

*எப்போதும் எனது உடலையே*

*நோக்குவர்*

*கணவன் தொடக்கம்*

*கடைக்காரன் வரைக்கும்*

*இதுவே வழக்கம்*"[35]

இக்கவிதையின் முடிவில் கணவன் தொடங்கி கடைக்காரன் வரைக்கும் எனக் கவிஞர் முடிப்பதில், பெண்கள் பற்றிய ஆண்களின் ஒட்டுமொத்தமான கருத்தைப் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் பெண் சமுதாயத்தின் உள்ளக் குமுறலையும் வெளிப்படுத்துகின்றார்.

ஆண்களின் இந்த மனநிலை மாற வேண்டும் என்பது பெண்ணியலாளர்களின் கருத்தாகும். ஆனால் பெண்களின் உள்ளம் பற்றி அவர்களைச் சுற்றி இருக்கும் காற்றும் மழையும், குழந்தையும் மட்டுமல்லாது புற்கள் கூட அறியும். ஆனாலும் இல்லறத்தின் மூலம் வாழ்நாள் முழுவதும் அருகிலேயே இருக்கும் கணவன் மட்டும் புரிந்துகொள்வதில்லை. இதை கவிஞர் சல்மா அவரது 'தாம்பத்யம்' என்ற கவிதையில் பதிவு செய்கின்றார்.

"*என்னைத் தழுவிச் செல்லும்*
*தென்றல் அறியும்*
*எனது மென்மை*

*என்னைச் சிதைத்து அழிக்கும்*
*வாழ்க்கை அறியும்*
*எனது உறுதி*

*நான் அணைத்து வளர்க்கும்*
*குழந்தை அறியும்*
*எனது நேசம்*

என்றாவது வரும்
மழை அறியும்
எனக்குள் இருக்கும் கவிதை

பனிபடர்ந்த
புற்கள் அறியும்
எனது காதல்

எனது கவிதைகள் அறியும்
எனது பூகம்பங்கள் அறியும்
என்னை

எப்போதும்
அறிந்ததில்லை நீ
எனக்கு நேர்ந்த
எதையுமே”[36]

இக்கவிதையில் ஆண்கள், பெண்களின் உணர்வுகளைப் புரிந்து-கொள்ளாமல் இருப்பதை வெளிப்படுத்துகின்றார் கவிஞர். இதனால் பெண்களுக்கு ஏற்படும் மன வலியையும் ஆண் சமூகத்திற்கு உணர்த்து-கின்றார்.

பெண்ணியம் எதிர்பார்க்கும் சமத்துவம், பெண் உரிமை, பெண் விடுதலை என்ற அனைத்துத் தளங்களிலும் வெற்றிபெற பெண்ணியம் போராடி வருகின்றது. இதன் முழுமையான வெற்றி ஆண் சமுதாயத்தின் உளவியல் மாற்றத்தால் மட்டுமே ஏற்படும் என்பதையும் பெண்ணியம் உணர்ந்துள்ளது. இதனால் பெண்ணியம் உளவியல் சமத்துவத்தை விரும்பி வரவேற்கின்றது.

### 3.2.1.2.2 கல்விநிலைச் சமத்துவம்

கல்வி மனித வாழ்விற்கு ஒளியேற்றும் தீபமாகும். கல்வியே மனிதனுக்குப் புதிய சிந்தனைகளையும், வாழ்வின் மாற்றத்திற்கான வழிகாட்டுதலையும் ஏற்படுத்துகின்றது. கல்விகற்பதற்கு காலமும், வயதும்,

பாலினமும் தடையாக இருக்க முடியாது. ஒருவன் குழந்தைப் பருவம் தொடங்கி இறுதிக் காலம் வரை கல்விகற்கமுடியும்.

> *“கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு*
> *மாடல்ல மற்றை யவை”.* (குறள்.400)

என்பது திருவள்ளுவர் கருத்தாகும். கல்வியே ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் ஆகும். கல்விதவிர சிறப்புடைய செல்வம் வேறு இல்லை என்பது இதன் பொருளாகும். மேலும் ஒருவன் ஒருமுறை கற்ற கல்வி அவனுக்கு ஏழுபிறவிகளுக்கும் பயனுடையதாக இருக்கும் என்று கூறுகின்றார் வள்ளுவர். இதை

> *“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
> *கெழுமையும் ஏமாப் புடைத்து”.* (குறள்.398)

என்ற குறள் எடுத்துரைக்கின்றது.

சிறப்புடைய செல்வமான கல்வியை வேதகாலத்தில் பெண்களும் ஆர்வமுடன் பயின்றுவந்தனர். அக்காலப் பெண்கள் சமய, தத்துவ விவாதங்களில் ஈடுபட்டனர். “அக்காலப் பெண்களின் உயர்கல்வி பற்றியும் அவர்களது அறிவுக்கூர்மையினையும் மூளைத்திறனையும் எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் உள்ளன”.[37] இதன் மூலம் த.இ. மஜீம்தார் அக்காலப் பெண்கள் உயர்கல்வி கற்றிருந்தனர் என்பதைக் கூறுகிறார். ஆனால் “இவ்வளவு ஆற்றல் அறிவு பெற்றிருந்தும் கூட பெண்களின் நிலை பெருமளவில் தாழ்ந்து காணப்பட்டது”.[38] சமுதாயம் பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகளை விதித்தது. இந்தச் “சமூகச் சூழல் பெரும்பாலும் பெண்களுக்கு எதிராகவே தொடர்ந்து கொண்டு வருகின்றது”.[39] பெண்களின் தனித்திறனையும் அறிவுவளர்ச்சியையும் ஆண் சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகப் பெண்களுக்கான கல்வியில், சமூகக் கட்டுப் பாடுகளை விதிக்கத் தொடங்கியது.

ஆண்களின் தேவைகளைக் கவனிப்பதற்கான சேவகியாகவே பெண்களை மாற்றியது சமுதாயம். இதனால் பெண்களின் பணி சமயலறைப் பணியாக மாறிப் போனது. இதன் அடிப்படையில் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்பது போன்ற கருத்துக்களைச் சமுதாயத்தில் பரப்பியது ஆணாதிக்கச் சமுதாயம். இவ்வாறான முயற்சிகளின் மூலம் பெண்களுக்கான கல்வியை முழுமையாகத் தடுத்து வெற்றி கொண்டது ஆண் சமுதாயம். "இதனால் பரந்த கல்வியறிவோ விரிந்த வெளியுலக விவகாரங்கள் பற்றிய விழிப்புணர்வோ பெற இயலாமல் போனது பெண் சமுதாயம்"[40] கல்வியறிவு இல்லாமல் போனதால் பெண் சமுதாயம் மேலும் தாழ்வடைந்தது.

சமுதாயத்தால் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. பெண்ணிய இயக்கங்கள் தோன்றி வளர்ச்சியடைந்த பின்னர், பெண்கள் கல்வி பெறுவதையே முதல் நோக்கமாகக் கொண்டன. "பெண்ணியக் கோட்பாட்டாளர்கள் பெண்களுக்கு எங்கெல்லாம் தன்னாட்சி அல்லது சுயமாகச் செயல்படும் நிலையில்லையோ அங்கெல்லாம் அவர்கள் நிலை பற்றி எடுத்துக் கூறியுள்ளனர்".[41] இதனால் பெண்ணியம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்ற போராட்டத்தில் பெண்கள் வெற்றிபெற்றனர். மேலை நாடுகளில் பெண்கள் தற்போது ஆண்களுக்கு நிகராகக் கல்வி பெற்றுள்ளனர்.

இந்தியாவில் பெண்கல்வி மறுக்கப்பட்ட நிலை நீண்டகாலமாகத் தொடர்ந்திருந்தது. ஆனால் பெண்ணியலாளர்களின் தொடர்முயற்சியால் கல்வி சமத்துவ நிலையை அடைந்தது. பாரதியார் பெண்கல்விக்காக உரத்த-குரல் எழுப்பினார்.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லை காணென்று"*[42]

என்று பெண்கள் உயர்கல்வி கற்று பட்டங்கள் பெற வேண்டும்' அதன் மூலம் அரசின் சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரத்தையும் பெற-வேண்டும் என்று பாடுகின்றார்.

"பெண்கள் கல்வி அறிவு பெறவேண்டும் என்பதில் பாரதி கொண்டிருந்த அக்கறை அவருடைய மாதர் கல்விக் கணக்கெடுப்பு என்ற கட்டுரையிலிருந்து தெரிகிறது. மொத்தம் 10,000 பெண்களுக்கு 94 பெண்களே கல்வி அறிவு பெற்றவர்கள் என்பதை அறிந்து மிக்க வேதனைப்-படுகின்றார்".[43] இந்த நிலையைக் கண்டித்து, பெண் கல்வியை வலியுறுத்து-கின்றார். பெண்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான ஆரம்பப்படிகளாக பாரதியார் ஒன்பது கருத்துகளைப் பட்டியலிட்டுள்ளார். அதில் பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியினை எல்லா நிலைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும் என்பது முக்கியக் கருத்தாகும். பெண்கல்வி குறித்து பாரதி கண்ட கனவு இன்று நிறைவேறி உள்ளது என்றே கூறவேண்டும்.

பாரதியாரின் கல்விக் கொள்கையைப் போலவே பாரதிதாசனும் பெண்களின் கல்விக்கு முதன்மையிடம் கொடுத்துள்ளார்.

> "*பெண்களுக்கு கல்வி வேண்டும்*
> *உலகினைப் பேணுதற்கே*
> *பெண்கட்குக் கல்வி வேண்டும்*
> *கல்வியைப் பேணுதற்கே*"[44]
>
> (பா.தா.கு.வி.)

என்று பெண்கள் கல்வி பெறுவதன் மூலமே உலகம் சிறப்புப் பெறும் என்கிறார் பாரதிதாசன். "பெண்ணடிமைத்தனம் ஒழிந்திட பெண்ணுக்கு முறையான கல்வி அவசியம். முறைப்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்பு மனரீதியாகவும் சமூகரீதியாகவும் பெண்ணைப் பாதுகாக்கும்"[45] என்பதைப் பெண்ணியப் படைப்பாளர்கள் பெண்களுக்குத் தொடர்ந்து உணர்த்திக் கொண்டு வந்துள்ளனர். இதன் காரணமாக இன்றைய நிலையில் பெண்கள்

கல்வியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர். இன்று தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சியின் காரணமாக கல்வித்துறையும் வியத்தகு வளர்ச்சி நிலையைப் பெற்றுள்ளது. இதன் காரணமாக, உலகின் பரப்பு மிகவும் சுருங்கி உள்ளது. சமுதாயத்தில் எவரும், 'விரும்புகின்ற கல்வியை எளிதாகப் பெறலாம்' என்ற நிலை உருவாகி உள்ளது.

வளர்ச்சி பெற்ற இந்த நிலையிலும் பெண்களுக்கான கல்வி முழுமையாகக் கிடைப்பதற்கு பல்வேறு தடைகள் உள்ளன. உயர்கல்வி பெற்றால் அப்பெண்ணிற்கு அவளின் படிப்பிற்கு ஏற்றார் போல் மணமகன் பார்ப்பதில் சிரமம் ஏற்படுகின்றது என்ற கருத்தை

*"மேல்படிப்பெதற்கு சம்பந்தம் கிடைக்காது*
*போதுமிது எல்லாம்"*[46]

என்ற கவிதையின் மூலம் பதிவு செய்கின்றார் கவிஞர். பல பெண்களின் படிப்பு அவள் பருவம் அடைந்தவுடன் நிறுத்தப் படுகின்றது.

பெண்ணின் ஆசைகள் அழிக்கப்பட்டு கனவுகள் சிதைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதை கவிஞர் திலகபாமா, 'நேற்றின் சேகரம்' என்ற கவிதையில் பதிவு செய்கின்றார்.

*"ஈரம் தோய்ந்திருந்த*
*கொள்ளைப்புறக் கதவாய் நானும்*
*நிலையோடு பொருந்த மறுக்க*
*அடித்து சாத்தியாயிற்று*

*திருஷ்டி கழித்து*
*தீயில் கரையவிட்ட சூடமோடு*
*எரியும் ஆசைகளோடு*
*முன் கதவும் தாழிட*

*உரை குத்திய பால்*
*நீருள் கண்ணிமை காக்க*

*மூழ்கடிக்கப்பட்ட சோறு*
*சூடேற்றிய குழம்பு*

*எல்லாம் பார்த்துப் பார்த்து மூடிவைக்கப்பட்டது*
*என்னையும் சேர்த்து*
*எதை தொலைத்து விடாமலிருக்கனும்*
*என்ற கேள்வியுடன்*

*தொலைந்த இருளோடு*
*நேற்றைய நிஜம் கரைந்து போயிருக்க*
*மூடிவைத்திருந்த புத்தகத்துள்*
*எழுதப்பட்டிருந்த கவிதை*
*சேகரம் செய்திருந்தது*
*யாராலும் சேமிக்கமுடியாத*
*நேற்றைய பொழுதின்*
*நிஜங்களின் படிமங்களை*"[47]

இக்கவிதையில் பெண்கள் சிறைவைக்கப்பட்டதால் அவள் மனதுக்குள் துயரங்கள் எழுகின்றன என்பதைப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

தொழில் வளர்ச்சி பெற்ற யுகமாக இருந்தாலும் பெண்களின் நிலை தொடர்ந்து அடக்குமுறையை எதிர் கொண்டு தான் வாழ வேண்டிய நிலை உள்ளது என்பதை இக்கவிஞர் உணர்த்துகின்றார். "இன்றைய நமது கல்வி முறையானது ஆண் பெண் பாகுபாட்டோடு பெருமளவில் மாற்றம் பெறாமலும் தொடர்ந்து கொண்டுள்ளது"[48] இந்த நிலை மாற வேண்டும்.

பாரதிதாசன் கூறியது போல், உலகம் மேன்மை அடைய வேண்டுமானால் பெண்கள் கல்விபெற்றவர்களாக உயரவேண்டும்; பெண்களுக்கான கல்வி கிடைப்பதில் எவ்விதத் தடையும் இல்லாமல் முழுமையான விடுதலையைப் பெண்கள் பெற வேண்டும். அதற்கான வழிகளைச் சமுதாயம் அமைத்துத்தர வேண்டும் என்பது பெண்ணிய வாதிகளின் எதிர்பார்ப்புகளில் ஒன்றாக உள்ளது.

### 3.2.1.2.3 வேலைவாய்ப்புச் சமநிலை

பெண்ணிய இயக்கங்களின் வளர்ச்சியின் காரணமாகப் பெண்கள் ஆண்களுக்கு இணையாக அனைத்துத் தளங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு ஈடுபடும் துறைகளில் சிறப்புடன் பணியாற்றி வெற்றிகளையும் பெற்று வருகின்றார்கள் என்பதும் வெளிப்படையான ஒன்றாகும். சமுதாயத்தில் பெண்கள் உரியமதிப்போடும், உரிமையோடும் வாழவேண்டும். அதற்கான வலிமையை அவர்கள் பெற வேண்டும். “பெண் வலிமை வாய்ந்தவளாக மாற வேண்டுமெனில் முதலில் அவள் தன்னைத்தானே வலிமை வாய்ந்தவளாகக் கருத வேண்டும். அப்போது தான் சமுதாயத்தில் ஆண் பெண் பேதம் நீங்கி சமதர்ம சமுதாயம் உருவாகும்”.[49] அவ்வாறான சமுதாயம் உருவாக பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

வேலைவாய்ப்புப் பெற்றபெண்கள் அவர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் வன்முறைகளை எதிர்ப்பதற்கு உண்டான உள்ள உறுதியைப் பெறுகின்றார்கள். மேலும் வெளி உலகுடனான தொடர்பும் ஏற்படுகின்றது. சுயமான சிந்தனையும் சுயமுடிவெடுக்கும் திறனும் பெற்றவர்களாக பெண்கள் மாற்றம் பெறுகின்றார்கள். அவள் மனதிற்குள் ஆழமாகப் பதிந்திருக்கும் தாழ்வு மனப்பான்மையும், அடிமைத் தன்மையும் விலக்கி சமூகச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் தன்மை பெற்றவளாக வளர்ச்சி பெறுகின்றாள்.

தொடக்க காலத் தாய்வழிச் சமுதாயத்தில் பெண்கள் வேட்டையாடுதல், ஆயுதங்களைக் கையாளுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். போர்களிலும் பெண்கள் ஈடுபட்டார்கள் என்பதையும் அறியமுடிகின்றது. ஆனால் அவற்றைத் தொடராமல், அவர்களுக்கான பணியை ஆண்களிடம் ஒப்படைத்தனர். அதை ஒரு பாதுகாப்பாகவும் பெண்கள் உணரத் தொடங்கினர். சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாக மாறத் தொடங்கியதன் தொடக்கம் இதுதான். பாதுகாப்பை உணரத்

தொடங்கிய பெண்ணை, ஆண் சமுதாயம் முழுமையாக அடிமையாக மாற்றியது; அதில் இருந்து பெண்கள் இன்றுவரை விடுதலை பெற முடிய வில்லை என்பது வரலாறு விளக்கும் உண்மையாகும்.

பெண்ணிய இயக்கங்கள் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதை உணர்த்தியது. தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் பெண்கள் பணியில் சேர்ந்தனர். பெண்களின் பணிக்கான ஊதியத்தை 1937ம் ஆண்டு நீதிமன்றம் நிர்ணயித்தது. இரண்டாம் உலகப் போரின் போது பெண்கள் இராணுவத்திலும் சேர்ந்து பணி செய்தனர். இதன் மூலம் அமெரிக்கப் பெண்ணிய இயக்கங்கள் உலகின் பெண் சமுதாயத்திற்கு ஊக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

இரண்டாம் உலகப்போர்க் காலகட்டத்தில் பெண்கள், பல பெரும் பதவிகளை வகித்து வந்தனர் "ஐயசனோபர் குடியரசுத்தலைவராக இருந்தபோது திருமதி ஒவேதா கல்ப்ஹாமி (Mrs. Oveta Lulb Hobby) என்ற டெக்ஸாஸ் மாநிலத்து மங்கை ஒரு இதழியலாளராக இருந்து அமைச்சரவை அதிகாரியாக மாறினார். அவர் சுகாதாரம், கல்வி நலத்துறைகளுக்கு அலுவலரானார்".[50] இவ்வாறு உயர்பதவிகளைப் பெற்றாலும் வேலைக்கான ஊதியத்தில் வேறுபாடு இருந்தது.

பாலின வேறுபாடுகாரணமாக மாறுபட்ட ஊதியம் வழங்கியதை எதிர்த்து, தொடர்ந்து போராடி வந்தனர். "இருபாலருக்கும் சமமான, வேலைக்குச் சமமான ஊதியம் என்பதில் சட்டரீதியான உரிமை வேண்டி போராடி வந்தனர்".[51] தொடர் போராட்டத்தின் மூலம் வெற்றிபெற்றனர். பெண்கள் வேலைவாய்ப்பின் மூலம் நிலையான பொருளாதாரத் தகுதியும் பெற்றனர்.

பெண்கள் உளவியல் ரீதியாக, நம்பிக்கை உடையவர்களாக மாறுவதற்கு பொருளாதாரத்தன்மை பலமாக அமைந்துள்ளது. அப்பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் வேலைவாய்ப்பு துணைநிற்கின்றது. இதனால் வேலைவாய்ப்பில் சமமானநிலை

ஏற்படவேண்டுமென்று பெண்ணிய இயக்கங்கள் தொடர்ந்து போராடி வருகின்றன. போராட்டத்தை இயக்கங்கள் நிறுத்திவிட்டால் பெண்களின் உரிமையை, உடனடியாக ஆணாதிக்கச் சமுதாயம் அவர்களிடமிருந்து பறித்துவிடும் அபாயம் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

பெண்கள் நீதித்துறை, கல்வித்துறை, பொதுப்பணித்துறை, பொறியியல் துறை போன்ற எல்லாத்துறைகளிலும் சாதனை படைக்கும் திறன்பெற்றுள்ளார்கள். இதனைப் "பெண்கள்" என்ற கவிதை நூலில் கவிஞர் குளோரி கிறிஸ்டோபர் பதிவு செய்துள்ளார்.

*"பொறியியல் துறையில் புகுந்து பெண்கள்*
*சரிநிகர் சமானமாய் சாதித்து விடுதலை*
*கண்டும் சமூகக் கண்கள் அவர்களை*
*வேண்டும் என்றே வெறுப்பது ஏனோ?*
*சொந்தக் காலில் நிற்கும் அளவில்*
*விந்தை மகளிர் விளங்கினர் இன்றே"*[52]

வேலைக்குச் செல்லும் பெண்களுக்குச் சமுதாயத்தில் சுதந்திர உணர்வும், நம்பிக்கையும் இருந்தாலும் வேறு மாதிரியான பல இடையூறுகளும் ஏற்படுகின்றன. பாலியல் சார்ந்த வன்முறைகளை அவர்கள் எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இல்லறத்தில் இருக்கும் பெண்களுக்கு அவளது ஒழுக்கம் மீதான அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. இது இல்லறத்திலேயே சொந்த குடும்பத்தின் மூலமாகவே எழும்போது, அதை எதிர்கொள்ளும் உறுதி இல்லாமல் பெண்கள் மனம் தளர்கின்றார்கள்.

பெண்ணின் ஒழுக்கத்தின் மீது விமர்சனத்தை உண்டாக்குவதன் மூலம் பெண்ணை அடக்கியாள ஆண் சமுதாயம் முயற்சிக்கின்றது. இதை 'கருவறை வாசனை' நூலில் கவிஞர் கனிமொழி எடுத்துரைக்கின்றார்.

*"அவள் உழைத்த காசில்*
*தினம் குடித்துவிட்டு வந்து*
*அவளை அணைக்கும் கணவனை*
*பத்தினிமார் வரிசையில் இடமின்றிப்*
*போகுமோ என நிதம்*
*பொறுத்துக் கொள்வாள்"*[53]

வேலைக்குச் செல்லும் பெண்களின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு பல பெற்றோர்கள் பெண்களுக்குத் திருமணம் செய்துவைப்பதற்கு தயங்கும் நிலையும் உள்ளது. இது போல் வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பல இடையூறுகள், பின்னடைவுகள் இருக்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி வேலை வாய்ப்பு, பெண்களுக்குச் சமுதாயத்தில் உயர்வான நிலையையும், மதிப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. எனவே வேலைவாய்ப்பில் பெண்கள் சமநிலையைப் பெறுவதில் முனைப்புடன் உள்ளார்கள் எனலாம்.

### 3.2.2 அதிகாரம்

பெண்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைச் சக்திகளில் மிகவும் வலிமை வாய்ந்தது அதிகாரம் ஆகும். பெண்களை அடக்கி ஆளும் அதிகாரத்தை ஆணாதிக்கச் சமுதாயம் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. இந்த அதிகாரத்தின் மூலமாகவே பெண்களைச் சுயசிந்தனை அற்றவர்களாக மாற்றிவைத்துள்ளது. ஆணாதிக்கச் சமுதாயத்தால் அதிகாரம் செலுத்தப்படுவதால், பெண்கள் அவர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்படும் கட்டுப்பாடுகளை உணர்ந்து கொள்ளும் திறன் அற்றவர்களாகவே இச்சமுதாயம் மாற்றிவைத்துள்ளது.

உடல்நிலைப் பண்புகளாலும் உணர்வு நிலைப் பண்புகளாலும் இயற்கையாகவே அதிகாரம் பெற்றவர்கள் ஆண்கள். அவர்களைச் சார்ந்து வாழ்வதற்காகப் படைக்கப்பட்ட சார்பு உயிரே பெண்கள் என்ற மன நிலையைப் பெண்கள் கொண்டுள்ளார்கள். பெண்களுக்கான பெண்மைப்

பண்புகளில் அச்சம் முதன்மை இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் பெண் என்பவள் எதற்கும் முதலில் அச்சம் கொள்ள வேண்டும் என்ற பண்பு கற்பிக்கப்படுகின்றது. அவ்வாறு அச்சம் கொள்ளாமல் எதிர்கொள்ளத் துணியும் பெண், பண்பற்றவளாக சமுதாயத்தால் ஒதுக்கப்படுகின்றாள். இதனால் துணிச்சல் மிக்க பெண்ணும் தனது துணிவை மறைத்துக் கொண்டு அச்சம் கொள்வது போல் காட்டிக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆட்பட்டுள்ளாள். இதனால் அதிகாரம் என்பது பெண்களுக்கு அந்நியமாக்கப்பட்ட ஒரு செயலாகவே உள்ளது.

இல்லற வாழ்வில் கணவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக பெண் இருக்க வேண்டியது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. கணவன் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நம்பிக்கையற்றவனாக இருப்பான். சமுதாயத்தில் உள்ள எதைக் கண்டும் அச்சம் கொள்பவனாக இருப்பான். அவனுக்கு ஏற்படும் ஆபத்துக்களை பெண்ணே துணிச்சலுடன் எதிர் கொள்பவளாக இருப்பாள். ஆனால் அப்பெண்ணையும் அதிகாரம் செய்யும் உரிமை சக்தியற்ற கணவனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் பெண்வலிமையற்றவளாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆணாதிக்கச் சமுதாயம் பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி உள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளை உடைத்து, பெண்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியை பெண்ணியம் மேற்கொண்டுள்ளது.

பெண்ணியம் அதிகாரத்தைக் கைப்பற்றும் தளங்களாகக் குடும்பம், சமுதாயம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது எனவே இங்கு அதிகாரம் குறித்த கருத்துகள்

1. குடும்பத்தில் அதிகாரம்
2. சமுதாயத்தில் அதிகாரம்

என்ற உட்தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

#### 3.2.2.1 குடும்பத்தில் அதிகாரம்

குடும்பத்தில் அதிகாரம் யாருக்கு என்று ஆய்ந்து பார்த்தால், “பெண்கள் குறிப்பாகவும் சிறப்பாகவும் அவர்கள் தன்னிச்சையாக விருப்பாக, செயல்பட முடியாத நிலை அவர்கள் திருமணத்தின் போது ஏற்படுகின்றது”.[54] திருமணத்தின் போது பெண்கள் அவர்களுக்கான வாழ்வைத் தேர்வு செய்யும் அதிகாரம் இல்லாதவர்களாகவே உள்ளனர். பெற்றோர்களால் தேர்வு செய்யப்படும் கணவன் எத்தனை குறைபாடு உடையவனாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு வாழும் நிலையே உள்ளது. கணவனின் முறையற்ற செயலை மாற்றி, அவனை நல்வழிப் படுத்த வேண்டியது மனைவியின் பொறுப்பு என்ற கட்டாயத்தைப் பெண்ணின் மீது தினிக்கின்றது சமுதாயம். “மணம் புரிந்து கொள்வது என்பது ஆண் மகன் தனக்கொரு பணிமகளைத் தேர்ந்து கொள்வது என்னும் பொருள்படுவதாக தான் ஸானியா மொழியில் வர்ணிக்கப்படுகிறது”.[55] அதாவது ஆண் குடும்பத்தின் தலைவன் என்ற பொறுப்பை வழங்கியுள்ளது சமுதாயம். இதனால் அவன் முழுமையான அதிகாரம் பெற்றவனாகின்றான். ஆனால் “உலகின் முக்கால்வாசிக் குடும்பங்கள் மகளிரின் பொறுப்பிலேயே இயங்கி வருகின்றன”.[56] ஆனாலும் தலைமைப் பொறுப்பு ஆணைச்சார்ந்தே உள்ளது. இது பெண்களுக்கு எதிராக ஆணாதிக்கச் சமுதாயம் ஏற்படுத்தியுள்ள அடக்கு முறைக் கட்டுப்பாடுகள் ஆகும்.

பெண்கள் சமுதாயத்தின் அனைத்துத் தளங்களிலும் செயல்-படுகின்றார்கள். அவர்கள் “ஆண்களைப் போல் திறமையுடன் பணிபுரிகின்றனர். எல்லா வேலைகளிலும் ஆண்களுக்கு நிகரான திறமை உண்டு. ஆண்-பெண் இருபாலருக்கும் உயிரியலின் தொடர்ச்சிக் கூறுகள், எதிரிடையான கூறுகள் அல்ல”[57] என்ற கருத்துக்கள் ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளன. ஆனாலும் பெண்கள் குடும்பம் என்ற கட்டுக்குள் அடைக்கப்படும் போது அவளது உரிமைகள் பறிக்கப்படுகின்றன; உணர்வுகள் மதிப்பு இழக்கப்படுகின்றன. இங்கு “பெண்களின் பணிகள் அல்லது வேலைகள் என்பது வீட்டுடன் தொடர்புடையது”.[58] இதனால் “பெண்ணுக்கு,

கணவன் நலன் தவிர்த்த வேறு சிந்தனைக்கு இடமேயில்லை என்பது வரையறுக்கப்பட்டது”.[59]

சங்ககாலப் பாடல்களில் கணவன் மீது மனைவி அன்பு கொண்டவள் என்பதை எடுத்துரைக்கும் விதமான பாடல்கள் இயற்றப்-பட்டன. தலைவனின் பிரிவை எண்ணிவாடும் தலைவி தன்னை அழகுபடுத்திக் கொள்ளாமல் வருந்திக் கொண்டிருந்தாள் என்று வர்ணிக்கப்பட்டது. இக்கருத்தாக்கம் சமுதாயத்தில் வலிமை பெற்றது. இதனால் இக்கருத்து பெண்களுக்கு எதிராக சமுதாயச் சட்டமாக்கப்பட்டது. “தலைவன் தன்னுடன் இருக்கையில் தன்னை அழகுசெய்து கொள்வதும், தலைவன் பிரிந்து சென்றபோது தங்களை ஒப்பனை செய்து கொள்ளாததும்”.[60] இங்கு தொடர்ந்து பெண்கள் மீது திணிக்கப்படும் சமுதாயக் கட்டுப்பாடாக இருந்து வந்துள்ளது.

இன்றைய பெண்ணியப் படைப்பாளர்கள் சமுதாயம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை தகர்த்தெறிந்து வெளிவர முயற்சிக்கின்றார்கள். ஆண்களின் அதிகாரத்தையும் ஆண்மையையும் ஒரே ஒரு பார்வையில் நொறுக்கிவிட முடியும் என்கிறார் கவிஞர் திலகபாமா

*“திருகும் மீசையும்*
*முறுக்கிய நடையும்*
*சொல்லாத ஆண்மையை எனக்குள்*
*அதிரப் புதைக்க நினைக்கின்றாய்*

*விழிக்கும் விழியில்*
*வேலியிடும் என் பார்வையின்*
*ஆண்மையைச் சந்தி நீ*
*மதுரையாவது புரியும்*

*தெறிக்கும் ஓர் சொல்லில்*
*உரித்து உன்னை*
*அம்மணமாக்கையில் புரியும்”*[61]

ஆண்மை என்பது உடலின் வீரத்தில் இல்லை. மன உறுதியே ஆண்மை; அந்த மன உறுதி பெண்களிடம் அதிகம் உண்டு என்று கூறுகின்றார் கவிஞர்.

இல்லறத்தில் இருக்கும் பெண்கள், கணவனை அதிகாரம் செய்ய வேண்டும் என்பதை விருப்பமாகக் கொண்டுள்ளதை கவிஞர் சல்மா,

*“முடியுமானால்*
*உன்னைச் சிறிதளவு அதிகாரம் செய்ய*
*நான் சிறிதளவு அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள”*[62]

என்ற கவிதையில் பெண்ணின் அதிகார எண்ணத்தைப் பதிவு செய்கின்றார்.

கணவன், மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவனாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே அவனுடனான உறவு இன்பமூட்டுவதாக இருக்கும். இல்லையென்றால் சுகமான உறவு கூட விஷநாகம் ஒன்று தீண்டுவதாகவே அமையும் என்பதையும் கவிஞர் சல்மா தனது ‘காலை வந்தபோது’ என்ற கவிதையில் பதிவு செய்கின்றார்.

*“விஷ நாகம் ஒன்று*
*என் மீதேறி இழைகையில்*
*நிலத்தில் கசிந்திருந்தது*
*கதிரவனின் ஒரு துளி*

*ஒரு பைத்தியக்காரன்*
*தாளிட்டிருந்த என் நினைவு கலைத்துத்*
*திடுக்கிடச் செய்கையில்*
*மிச்சமிருந்தது*
*அன்றைய விடியலின்*
*இறுதிக் கதிர்”*[63]

ஒரு நாளின் விடியல் சுகமானதாக இருக்க வேண்டுமானால் பெண்ணுக்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற தனது மனக் கருத்தைப் பதிவு செய்கின்றார் கவிஞர்.

பெண்ணின் உணர்வுகளை உதாசீனப்படுத்தும் ஆணாதிக்க மனப்பான்மையுடையோர் என்றாவது ஒரு நாள் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கை செய்கின்றார். 'வனப்பேச்சி'யில் கவிஞர் தமிழச்சி தங்கப் பாண்டியன்,

*"கடற்கரை மணலைத் தட்டி உதிர்க்கின்ற*
*அலட்சியத்துடனோ*
*சாலை விபத்தொன்றைப்*
*புறக்கணிக்கின்ற பொறுப்பின்மையுடனோ*
*இனியும் என்னை அணுக விரும்பும்*
*உனக்கு ஒரு வார்த்தை*

*சுவடுகளைப் பின்பற்றச் சொல்லும்*
*உன் சொற்களுக்கு எதிரான*
*என் மௌனம் மிக வன்முறையானது*

*என் பகலிரவைத் தீர்மானிக்கின்ற*
*உன் திசைமானியின்*
*ஈர்ப்பு விசை என்*
*ஆதித்தாயிடமே என்கிற ஆதாமாய் ஒருநாள்*
*நீ வருவாய்*

*அப்போது கேட்பேன்*
*எல்லாவற்றையும் முடிவு செய்கின்ற*
*உன் ஆட்காட்டி விரலை*
*ஏகலைவன் காணிக்கையாய்"*[64]

இன்றைய படைப்பாளர்களின் கவிதைக் குரல் மூலம் பெண்ணியம் எதிர்பார்க்கும் அதிகாரம் பற்றிய கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும். பெண்ணியத்தின் தொடர் போராட்டங்களின் மூலம் பெண்கள் அவர்களுக்கான அதிகாரத்தை விரைவில் பெறுவார்கள் என்பதும் பெண்ணியத்தின் நம்பிக்கையாகும்.

### 3.2.2.2 சமுதாயத்தில் அதிகாரம்

பெண்கள் சமுதாயச் சடங்குகளால் ஒடுக்கப்பட்டவர்களாக உள்ளனர். பெண்களுக்கான சமுதாய அதிகாரம் என்பது பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லாதவர்களாகவே பெண்களைப் பாது-காக்கின்றது. ஆணாதிக்கச் சமுதாயத்தில் “பெண்ணின் அழகு முக்கியத்துவம் பெறுகின்றது. தனக்கென்று தனியாக விருப்பு வெறுப்புகள் பெண்ணிற்கில்லை. ஆணின் கீழ் அடக்கமாக அவன் இச்சைப் படி வாழுகின்ற பெண் போற்றப்-படுகின்றாள்”.[65] இதனால் பெண் அவளது திறனையும் அறிவையும் வெளிப்படுத்துவதில் அச்சம் கொள்கின்றாள்.

பெண் முதிர்ச்சி பெற்றவளாக இருந்தாலும் அவள் தனியாகச் செல்ல சமுதாயத்தில் அதிகாரம் இல்லை. மேலும் ஒரு சிறுவனை ஆண் மகன் என்ற தகுதியுடன் அவளது பாதுகாப்பிற்காக அழைத்து வரவேண்டும் எனக் கட்டாயப் படுத்துகின்றது. ஆனால் அந்தச் சிறுவனை பாதுகாப்பாக அழைத்துவரும் கடமையும் பெண்ணிற்கே ஏற்படுகின்றது.

பெண்களுக்கான அதிகாரம் என்பது நாட்டை ஆட்சிசெய்யும் அரசியல் அதிகாரம் என்பதல்ல. உலகின் தலைமைப் பொறுப்பேற்று சர்வ வல்லமை படைத்தவளாக வளர்ச்சிபெற வேண்டும் என்பது அல்ல. பெண்கள் அவர்கள் மீது ஏவப்படும் அடக்குமுறையில் இருந்து விடுதலை பெறுவதும், பெண்கள் அவர்கள் விரும்பும் செயல்களைச் செய்வதற்கான உரிமைகளைப் பெறுவதும் சுயமாகச் செயல்படுவதற்கும், சிந்தனை செய்வதற்கும் உரிமை பெறுவதையுமே பெண்ணியம் தங்களுக்கான அதிகாரமாக வரையறை செய்துள்ளது.

சமுதாயம் பெண்கள் மீது பெண்மைப் பண்பைக் கற்பிக்கின்றது. அப்பெண்மைப் பண்பு என்பது மென்மையானவர்கள், அதிர்வாகப் பேசாதவர்கள் என விளக்கப்படுகின்றது. பெண்கள் “அநீதிகளை எதிர்த்து தங்கள் விருப்பத்தைத் திணிக்க சக்தியற்றவர்கள். அவர்கள் சமத்துவ-மின்மையினைச் சாடும் சக்தியில்லாதவர்கள். அவர்கள் அவ்வாறு அதிகாரம்

இல்லாது இருப்பதால் வேறு சிலர் தங்கள் அதிகாரத்தை அவர்கள் மீது செலுத்துகிறார்கள்; அவர்களை அடக்கி ஒடுக்குகிறார்கள்; அவர்களைக் கீழ்ப்படிய வைக்கின்றனர்".[66] இதனால் பெண்கள் உளவியல் ரீதியாகத் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக இயல்பாகவே மாறிப் போனார்கள். ஆனால் "இன்றைய பெண்ணியவாதிகளோ பெண்களின் அடிமைத் தளையகற்றி விடுதலை அளிக்கும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்"[67] எனலாம்.

பெண்கள், பெண்மைப் பண்புகளில் இருந்து விடுதலை பெறுவதற்கும் "பெண்ணின் இயல்பு என்பதான எண்ணப் போக்கினையும், ஆண் தனத்தை விலக்கும் போக்கினையும் உடல்ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட வகைப்பாடுகளையும் எதிர்த்துப் போராடுகின்றனர்".[68]

சமுதாயம் கற்பித்துள்ள பெண்மைப் பண்புகளில் இருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும். இதன் மூலமே பெண்கள் சுயமாகச் செயல்படும் அதிகாரம் பெற்றவர்களாக மாற முடியும். பெண், சமுதாயத்தில் தனியாகச் செல்வதற்கும் அவளது சுயவிருப்பங்களைத் தயக்கமின்றி வெளிப்படுத்து-வதற்கும் அதிகாரம் பெற வேண்டும்.

இன்றையப் பெண்ணியம் பெண்களுக்கான அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செயல்படுகின்றது. பெண் என்பவள் ஆணுக்கு இணையானவள்; அவள் சமுதாயத்தில் சரிபாதியான ஓர் அங்கம். ஆண்களுக்கு உள்ள அனைத்து அதிகாரங்களும் உரிமைகளும் பெண்களுக்கும் உண்டு என்பதை உணர்த்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது இன்றும் பெண்ணியத்திற்கு ஒரு சவாலாகவே உள்ளது.

பெண்ணியப் படைப்பாளர்கள் பெண்களின் உரிமைகளை வெளிப்படுத்துகின்றார்கள். பெண்களின் அதிகாரம் பற்றிய எல்லையை ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கின்றார்கள். பெண்களைக் கட்டுப்படுத்தி வைப்பதாலோ, சிறைப்படுத்தி வைப்பதாளோ அவளின் அதிகாரத்தைத் தடுத்துவிட முடியாது என்பதைப் பெண்ணியப் படைப்பாளர்கள் அவர்களது படைப்புகளின் மூலம் உணர்த்துகின்றார்கள்.

பெண்களின் போராட்டமும் விடுதலை உணர்வும் ஆணாதிக்கச் சமுதாயத்தால் உணரப்படுகின்றது என்பதையும் அறியமுடிகின்றது.

சமுதாயம் பெண்கள் மீது ஏவும் வன்முறை மிகவும் கடுமையானது. பெண் எப்படி நடந்து கொண்டாலும் அவளிடம் குற்றம் காண்கின்றது இதன் மூலம் பெண்ணைக் கட்டுப்படுத்துகின்றது சமுதாயம். இதனால் 'ஊடறு' கவிதைத் தொகுப்பில் கவிஞர் அருட்கவிதா 'மனுசியாக என்ன வழி' என்ற கவிதையில் சமுதாயத்தைப் பார்த்து தனது கேள்வியை முன் வைக்கின்றார்.

*"கணவனை இழந்தால்*
*கைம்பெண் என்றிடுவர்*
*பண்போடு நடந்தால்*
*பகட்டு என்பர்*
*வாய் திறந்தால்*
*வாயாடி என்பர்*
*ஆடி நடித்தால்*
*ஆட்டக்காரி என்பர்"*[69]

என்ற கவிதையில் பெண்கள் மீதான சமுதாயத்தின் பார்வையை விளக்குகின்றார். மேலும் அவர் தனது 'அவர்களின் பார்வையில்' என்ற கவிதையில் பெண்களைச் சமுதாயம் எதுவும் அற்றவர்களாகவே பார்க்கின்றது. உணர்வுகளற்றவர்களாக உரிமையற்றவர்களாவே பார்க்-கின்றது என்பதை ஊடறு கவிதைத் தொகுப்பில் கவிஞர்கள் றஞ்சி-தேவா முதலியோர் பதிவு செய்கின்றார்கள்.

*"அவர்களின் பார்வையில்*
*நான் வெறுமையானவள்*
*அவளுக்கென்று எதுவுமில்லை*
*அவளுக்கென்று யாருமில்லை*
*பலரின் கிசுகிசுப்புகள்"*[70]

என்ற கவிதையில் எடுத்துரைக்கின்றார்கள்.

பெண்கள் பாலியல் குற்றவாளிகளாக மாறுவதற்குச் சமுதாயமே காரணம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார் கவிஞர் புதிய மாதவி,

*"வயிற்றுப் பசிக்காக*
*இருட்டில்*
*நிர்வாணப்பட்டது*
*சமூகக் குற்றம்"*[71]

சமுதாயம் பெண்களுக்கு இழைக்கும் அநீதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது இக்கவிதை. பெண்களுக்குச் சமுதாயம் ஏற்படுத்தியுள்ள தடைகளை 'வன்மப்படுதல்' கவிதையில் கவிஞர் அனார் பதிவு செய்துள்ளார்.

*"சுற்றி வளைத்து*
*வேலிகட்டி*
*அதற்குள் என்னைச்*
*சுவாசிக்கச் சொல்வதுதான்*
*நீ காட்டும் சுதந்திரம்"*[72]

என்ற கவிதை சமுதாயம் பெண்களைச் சுற்றி வேலிகட்டி வைத்திருக்கும் நிலையை எடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சமுதாயக் கட்டுப்பாடுகளில் இருந்து வெளிவர வேண்டும். அதற்கான அதிகாரத்தைப் பெற வேண்டும் என்பதே பெண்ணியம் கொண்டுள்ள அதிகார எல்லையாகும். ஆனால் சமுதாயம் மீண்டும் மீண்டும் பெண்களைச் சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுகின்றது.

சமுதாயத்தின் இறுக்கமான பிடியில் இருந்து பெண் விடுபட-முடியவில்லை என்பதையும், மீண்டும் மீண்டும் அது பெண்களைச் சிறைப் பிடிக்கின்றது என்பதையும் கவிஞர் திலகபாமா 'தேடிய அமுதம்' என்ற தனது கவிதையில் பதிவுசெய்கின்றார்.

*"எமை தின்ன நினைக்கும் சமூகம்*
*தினம் தினம் தின்றும்*
*தீராது பசியென*
*வயிறு தடவும்*

எப்போதும் என் பாதைகளைத்
திருத்துவதாய் சொல்லியே
என் தீர்மானங்களைத் திருடி
தன் தீர்மானங்களைத் திணித்திருக்கும்

என் பாதையில் நெருஞ்சிகளாய்
பூத்திருக்கும்

என் பயணமோ ஒளியாய்
பால் வெளிகள் தாண்டி
எந்த மலையும் மடுவும்
தீர்மானிக்க இயலாததாய்

உதவி புரிவதாய்
ஊமைக் கள்ள கண்ணன்கள்
ஓரடிப் பழம் உயர
ஒளிக்காது என் மனம் பேசச் சொல்லும்

அடுத்து என்னவரும்
அறியாது எனைக் கடையும்
தேவர்களும் அசுரர்களும்
நானே அமுதம் என்றறியாது"[73]

சமுதாயம் எப்பொழுதும் பெண்களைத் துன்பத்திற்கு ஆட்படுத்திக் கொண்டே இருக்கின்றது. பெண்கள்தான் சமுதாயத்தின் உயர்வு என்றும் அவளே இன்பம் தரக்கூடிய அமுதம் என்பதையும் இறுதி வரிகளில் குறிப்பிடுகின்றார். ஆனால் பெண்களின் மகத்துவம் அறியாத சமுதாயம் அமுதமான அவளிடமே அமுதத்தைத்தேடி துயரத்தில் ஆழ்த்துகின்றது என்பதைக் கூறுகின்றார்.

சமுதாயத்தில் பெண்கள் மீது எந்த நிலையிலும் எழும் குற்றச்சாட்டு, அவளது நேர்மையை அல்லது அவளது கற்பு நிலையைச் சந்தேகிப்பது என்பதாகும். இந்தப் பழி எப்போதும் எங்கிருந்தும் சுமத்தப்படும்

அபாயம் பெண்களுக்கு உள்ளது. இதைக் கவிஞர் கனிமொழி ‘அகத்திணை’யில் வெளிப்படுத்துகின்றார்.

> *“பாவ விமோசனத்திற்கு*
> *ராமனுக்காகக் காத்திருக்காதே*
> *அவன் சீதையின்*
> *அக்னிப் பிரவேச ஆயத்தங்களில்*
> *ஆழ்ந்திருக்கிறான்”*[74]

சமுதாயத்தின் பழிகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் முடிவு கட்டுவதற்கும், அதிலிருந்து விடுதலை பெறுவதற்கும் பெண்களுக்குச் சமுதாய அதிகாரம் இருக்க வேண்டும் எனக் கூறுகின்றது பெண்ணியம். பெண்ணியப் படைப்பாளர்களின் உரத்த குரல் பெண்களுக்கான சமுதாய அதிகாரத்தைப் பெற்றுத்தரும் என நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

### 3.2.3 தன்னாட்சித் தனிமை

பெண்ணியம், பெண்விடுதலை என்பதில் சுய ஆட்சி என்பதை முதன்மைக் கோட்பாடாகக் கொண்டுள்ளது. இந்த சுய ஆட்சி என்பது பெண்கள் மட்டும் நிறைந்த உலகில் ஆட்சி செலுத்துதல் என்பதோ, ஆண்களை முழுமையாகச் சமுதாயத்தில் இருந்து வெளியேற்றிவிட்டு பெண்கள் மட்டும் வாழும் நிலை என்பதோ இல்லை. சமுதாயம் ஆண்-பெண்கள் ஆகிய இருபாலராலும் ஆனது. ஆண்கள் இல்லாது பெண்களோ, பெண்கள் இல்லாது ஆண்களோ உலகில் வாழமுடியாது.

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சார்ந்து சார்பு வாழ்க்கை வாழும் போதுதான் சமுதாயம் வளம் பெறும். மனித சமுதாயமும் வளர்ச்சிபெற முடியும். ஆனால் இந்தச் சார்பு வாழ்க்கையே ஒருவர் மீது ஒருவர் அதிகாரம் செலுத்தும் நிலையையும் எல்லை மீறிய அடக்கு-முறைகளையும் ஏற்படுத்துகினறது. அவ்வாறு ஏற்பட்ட அதிகார மோதலில் ஆணாதிக்கச் சமுதாயம் வெற்றிபெற்றுவிட்டது. பெண்களை அடக்கி வைத்து, அதிகாரம் செலுத்துவதில் இன்பம் கண்டு வருகின்றது. இந்த ஆண் ஆதிக்கச்

சமுதாயத்தின் கோரப்பிடியில் சிக்கிய பெண்கள் நீண்ட காலமாக அடிமை வாழ்வை வாழ்ந்து வருகின்றார்கள். இந்தக் கட்டுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதே பெண் சமுதாயத்தின் அவசியத் தேவையாக உள்ளது.

பெண்ணியம் முன் வைக்கும் சுய ஆட்சி என்பது ஆணாதிக்கச் சமுதாயத்திடம் இருந்து விடுபடுதல்; அடக்கி ஆளப்படும் நிலை முதலியவற்றிலிருந்து இருந்து தன்னை மீட்டெடுத்துக் கொள்வதாகும். பெண்ணியம் பெண்கள் அவர்களது வாழ்க்கை முறையைப் பற்றிய கருத்துக்களில் சுயமாக முடிவெடுத்தல், சமுதாயம் குறித்த பெண்களின் சிந்தனைகளுக்குச் சமுதாயம் மதிப்பளிக்கச் செய்தல், பெண்களின் உரிமைகளை எவ்வித இடர்ப்பாடுகளும் இல்லாமல் பெற்றுக் கொள்ளுதல் போன்றவைகளே பெண்களுக்கான சுய ஆட்சி என விளக்கமளிக்கின்றது.

இன்றையப் பெண்ணியம் பெண்களுக்கான சுய ஆட்சி என்பதில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டும் என்பதையும் முதன்மைக்கருத்தாகக் கொண்டுள்ளது. ஒருவரின் கருத்துகள் மதிக்கப்பட வேண்டுமானால் பொருளாதாரப் பின்புலம் அவசியம் என்பதை பெண்ணியம் நன்கு உணர்த்துள்ளது. இதுவே சொத்துரிமைக் கோரிக்கைக்கான காரணமாகவும் அமைகிறது.

பெண்ணியம் முன்வைக்கும் சுய ஆட்சி என்ற கருத்து இங்கு,

1. கருத்தியல் சுயஆட்சி
2. சொத்துரிமைச் சுய ஆட்சி

என்ற உட்தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன.

### 3.2.3.1 கருத்தியல் சுய ஆட்சி

சமுதாயம் காலமாற்றத்திற்கு ஏற்றவாறு நடைமுறைக்கு சாத்திய-மில்லாத ஏராளமான பண்பாட்டு செயல்முறைகளை மாற்றியமைத்து வந்துள்ளது. “பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்தவையாயினும்

விமர்சனத்துக்குட்படுத்தும் போது எதிர்நிற்க முடியாதவை மாற்றப்பட வேண்டுமென்ற வேகம் பரவிய அந்தக் காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றவைகளில் சமூகத்தில் பெண்களின் நிலை பற்றிய மறுபரிசீலனையும் ஒன்று"[75] என்பது பெண்ணியலாளர்களின் கருத்தாகும். பெண்களைத் தொடர்ந்து அடிமையாகவே நடத்தமுடியாது. அவளை மனித உயிராக எண்ணாமல் ஒரு பொருளாகக் கருதும் நிலை மாற்றியமைக்கப் பட வேண்டும் என்று பெண்ணியம் விரும்புகின்றது.

சமுதாயம் மனித இனத்தால் நிறைந்துள்ளது. அதில் சரிபாதியாக இருப்பது பெண்ணினம் ஆகும். சமுதாயத்தில் தனிமனித உரிமைகள் போற்றப்படுகின்றது. தனிமனிதச் சுதந்திரம் வலியுறுத்தப்பட்டதென்றால் அது ஒரு பெண்ணிற்கும் உரியதுதான். ஒரு ஆணுக்கு உரிய அனைத்து உரிமைகளும் அதே அளவில் பெண்ணுக்கும் உரியது. பெண் என்பவள் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவள். பகுத்தறிவுச் சிந்தனையும் அறிவியல் சிந்தனையும் ஆய்வுத் திறனும் ஆணுக்கு உள்ளது போலவே பெண்ணுக்கும் உள்ளது.

"மேலை நாடுகளில் பெண்ணியக் கருத்துகள் வளர்ந்து காலப் போக்கில் அந்நாடுகளில் மாறிவந்த சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு பெண்ணியச் சிந்தனைகளும் மாறுபாடுகளை அடைந்தது".[76] மேலை நாடுகளான அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய பெண்ணிய இயக்கங்களின் வளர்ச்சியாலும் போராட்டங்களாலும் உலகம் முழுவதும் பெண்களுக்கான சுயாட்சி மலரத் தொடங்கியது எனலாம். கிருஸ்தவ மதத்தில் புராட்டஸ்டாண்டு பிரிவினர் சமூகச் சீர்திருத்தங்களில் ஈடுபட்டனர் அவர்கள் "பெண்களுக்கு அதிக சுதந்திரம் அளித்தனர். பெண்கள் தேவாலயப் பணிகளில் பாதிரிகள் ஆகவும் பொதுக் கூட்டங்களில் பேசவும் அனுமதிக்கப்பட்டனர்".[77] இதன் மூலம் கருத்துகளை வெளியிடும் சுதந்திரம் பெற்றார்கள்.

மேலைநாடுகளில் பெண்களின் சுயாட்சிக்காகப் பல அறிஞர்கள் பாடுபட்டனர். ஜான்கார்ட்ரைட் ஜெரிமிபென்தாம், ஜான்ஸ்வோர்ட் மில்

ஆகியோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். இது போன்று பல்வேறு பெண்ணிய அறிஞர்களின் போராட்டங்களின் மூலம் பெண்கள் அரசியலில் பங்குபெறும் உரிமையைப் பெற்றார்கள். தேர்தலில் ஓட்டளிக்கும் உரிமையை அமெரிக்க அரசும் இங்கிலாந்து அரசும் வழங்கியது. பெண்ணியத்தின் இந்த வெற்றி உலகம் முழுவதும் பிரதிபலித்தது. உலகின் பல்வேறு நாடுகளும் பெண்கள் தேர்தலில் பங்கு கொள்ளவும் வாக்களிக்கவும் உரிமையை வழங்கியது. இது பெண்ணியம் பெற்ற சுயாட்சி உரிமையாகும்.

மேலை நாட்டுப் பெண்ணியத்தின் வளர்ச்சி இந்தியாவிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியப் பெண்களும் கருத்துகளை வெளிப்படுத்தும் உரிமையைப் பெற்றார்கள். இதற்கு விடுதலைப் போராட்டமும் ஆங்கில ஆட்சியும் காரணமாக இருந்தது என்பதை அறியலாம். “ஆங்கில ஆட்சியின் மூலமே தனிமனித விடுதலை தமக்கெனத் தனித்தன்மை, தன்னாட்சி, அரசியல் விடுதலை குடியாட்சி போன்றவற்றை அறிந்து விழிப்புணர்வு பெற்றனர்”.[78] அதன் தொடர்ச்சியாக இந்தியாவில் பெண்ணியம் எழுச்சி பெற்றது.

பெண்ணியத்தின் சுயாட்சிக் கோட்பாடு படைப்பாளர்களின் படைப்புகள் மூலம் வலியுறுத்தப்பட்டன. பெண்களின் உரிமைகள் எடுத்துரைக்கப்பட்டன. ஆனால் தொடர்ந்து பெண்ணியம் நடத்திவரும் போராட்டங்களின் மூலமே பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இந்த உரிமைகள் சமுதாயம் முழுவதும் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் தடையின்றி கிடைக்கவில்லை எனலாம்.

சமுதாயம் பெண்களுக்கான இடர்ப்பாடுகளைத் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டே வருகின்றது. ஆனாலும் பெண்ணியம் சவால்களை எதிர்கொண்டு பெண்களுக்கான உரிமைகளையும் சுயாட்சியையும் பெற்றுவருகின்றது.

சமுதாயம் தொடர்ந்து கட்டுப்பாடுகளையும் இடர்ப்பாடுகளையும் ஏற்படுத்தினாலும் அவற்றையெல்லாம் வெற்றி கொள்ளும் மன உறுதி பெண்களிடம் உள்ளது என்பதைக் கவிஞர் அனார் எடுத்துரைக்கின்றார்.

*“எத்தனை தீப்பந்தல்கள்*
*எரிந்தாலும்*
*சூரியனைப் பற்றவைக்க*
*உன்னால் முடியாது”*[79]

பெண்களுக்கான பிரச்சினைகளில் அவர்கள் அனுமதிபெறாமல் அடுத்தவர்கள் முடிவெடுக்கும் நிலையைக் கவிஞர் தமிழச்சி தங்கப் பாண்டியன் தனது ‘தீராதவள்’ என்ற கவிதையில் வெளிப்படுத்துகின்றார்.

*“எனக்கான வார்த்தைகளை*
*நீ முடிவு செய்கையில்*
*நான் நேர்கிற மௌனம்*
*மிக வலிமையானது*
*ஒரு வயோதிகப் பிச்சைக்காரனைப்*
*புறந்தள்ளிய அலச்சியத்துடன்*
*நீ நடக்கும் பொழுது*
*அவனுக்கு நிழல் தரும் மரத்தின்*
*திடத்துடன் உன்னைச் சந்திக்கும்”*[80]

கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படும் போது ஏற்படும் மனச்சிதறல்களை எடுத்துரைக்கின்றது கவிஞரின் இந்தக் கவிதை. இதன் மூலம் பெண்களுக்கு கருத்துகளை வெளியிடும் சுயாட்சி வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் கவிஞர்.

பெண்களின் கருத்துரிமை பறிக்கப்படும் போது இல்லற வாழ்வும் உடைந்து போகும் என்பதைக் கவிஞர் சல்மா தனது ‘சுயம்’ என்ற கவிதையில் பதிவு செய்தின்றார்.

*“எளிய விருப்பங்களுடன்*
*தயங்கியபடித் தொடங்கும்*
*உன் வீட்டில்*
*எனது முதல் நாள்*

*அருகில் வந்து*

*என் கை பற்றிப்*

*பரிச்சயமான முகங்களில் வழிந்த*

*பிரியங்களின் அரவணைப்பும்*

*கபடமற்றுத் தொடர்ந்த அக்கறைகளும்*

*எனது காரியங்களிலொன்றோடு*

*உங்களில் ஒருவர்*

*இணங்கிப் போக முடியாத கணத்தில்*

*உடையத் தொடங்கும்*

*பெரும் பாதுகாப்பின்மையை*

*என்னுள் உறுதி செய்தபடி*"[81]

சமுதாயத்தால் ஏற்படும் அடக்குமுறைகளில் இருந்து போராடி வெளிவரும் பெண்களை, மீண்டும் தனது நீண்ட கரத்தால் வளைத்துப் போடும் சமுதாயத்தின் மீது ஏற்படும் கோபத்தின் காரணமாக, ஆயுதமும் ஏந்த வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்கை செய்கின்றார் கவிஞர் திலகபாமா,

"*எனைச் சுற்றி சாட்டைகளாய்*

*நீளும் நாவுகள்*

*நக்கி விடும் தீர்மானத்துடன்*

*குனிந்து வளைந்து எக்கி தாண்டி*

*எச்சில் ஒழுகும் நாக்குகள்*

*அருவருப்பு தவிர்க்க*

*இறுதியில்*

*எனக்குள் மெழுகு பூசி*

*தாமரை இலையாய் மாறியிருக்கிறேன்*

*விழுகின்ற எச்சில் துளிகள்*

*உருண்டோடி விழுந்து*

*தெறித்து சிதறிப் போக*

*எனக்கு ஈரம் வார்க்க நினைத்த*
*நீரும் எனக்குள் இப்போது*
*சேர்த்துக் கொள்ள நினைத்தாலும்*
*சாத்திய மில்லாது*
*ஈரப்பசை இன்றி வறன்டிருக்கிறேன்*
*மெழுகுப் பூச்சு*
*தொலைக்கும் நாள் வேண்டி*
*பூசி என்னை மறைத்துக் கொள்ளாது*
*கத்தி எடுத்திருக்கலாமே*
*நாவு துண்டாட*"[82]

இக்கவிதையில் சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் கற்பித்துள்ள பெண்-களுக்கான மெழுகுப்பூச்சு சடங்குகளில் இருந்து பெண்கள் விடுபட்டுவிடவேண்டும் என்ற ஆதங்கத்தைப் பதிவு செய்கின்றார் கவிஞர்.

பெண்கள் சுயமாகச் சிந்திக்கும் உரிமை வேண்டும் என்ற கருத்தை பெண்ணியப் படைப்பாளர்கள் பதிவுசெய்கின்றார்கள். பெண்களுக்கான கருத்தியல் சுதந்திரம் முழுமையான பெண் விடுதலைக்கு வழி ஏற்படுத்தும் என்பது பெண்ணிய ஆய்வுகள் வெளிப்படுத்தும் கருத்தாகும்.

### 3.2.3.2 சொத்துரிமைச் சுயாட்சி

பெண்களுக்கான விடுதலையை நிர்ணயம் செய்வதில் பொருளாதாரம் பெரும் பங்கு வகிக்கின்றது. "சொத்துரிமை ஆணின் கைக்கு மாற்றமுற்ற போதே பெண்ணின் அடிமை வாழ்வுக்கு அடிப்படை அமைந்து விட்டது".[83] இதனால் பெண்ணியத்தில் அதன் அடிப்படைக் கோட்பாடாக சொத்தில் தனிஉரிமை வேண்டும் என்ற கருத்து உயர்வு பெற்றது. "பெண் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பறிகொடுத்தாள். கணவனின் சொத்தாக மாறினாள், அடிமையானாள், இதுவே பெண்ணின் அடிமை வாழ்வின் தொடக்கமாகும்".[84] என்பதை பெண்களுக்கு உணர்த்துகின்றது இன்றையப் பெண்ணியம்

மேலை நாட்டுப் பெண்ணியம் பெண்களுக்கான பொருளாதார நிலையை உயர்வடையச் செய்வதைத் தனது நோக்கமாகக் கொண்டது. “பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக் கொள்ள தாம் விரும்பியபடி பற்பல பணிகளை ஏற்பதும் சொத்தில் பங்கு பெறுவதும்”.[85] அவசியமாகும் என்று வலியுறுத்துகின்றது. “மேலை நாட்டுப் பெண்ணியம் தனியுரிமை, சமத்துவம், அரசியல் விடுதலை மற்றும் தன்னாட்சி இவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது”.[86] பெண்கள் பொருளாதார நிலையில் உயர்வு பெற்றிருந்தால் அவர்களுக்கு ஆண் சமுதாயம் அனைத்துவிதமான உரிமைகளையும் வழங்குகின்றது.

“இந்தியாவைப் பொறுத்த மட்டில் தனியுரிமை என்பது ஒரு புதிய கருத்தாக்கம் ஆகும்”.[87] இந்தியப் பெண்கள் பெண்மைப் பண்புகளை அதிகமாகக் கொண்டவர்கள். அவர்கள் ஆண்களைச் சார்ந்தே வாழ்ந்தவர்கள். ஆண்களுக்காகச் சேவைகளைச் செய்வதிலேயே மகிழ்ச்சி கொள்பவர்களாக மாறிப்போயுள்ளனர். இந்தியப் பெண்கள் என்ற கருத்து உலக அரங்கில் உயர்ந்துள்ளது என்பதை மேலைநாட்டுப் பெண்ணிய அறிஞர்களின் கருத்துக்கள் மூலம் அறியலாம்.

இன்றைய இந்தியப் பெண்ணியம் பெரும் மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதன் ஒரு பகுதியாகப் பெண்களுக்குச் சொத்தில் உரிமை உண்டு என்பது அரசியல் சட்டமாக்கப்பட்டுள்ளது. சொத்தில் உரிமை பெறுவதன் மூலம், பெண்கள் சுய அதிகாரமும் தன்னாட்சி உரிமையும் பெறுகின்றார்கள். பெண் விடுதலை என்பதன் வளர்ச்சி நிலையே, சொத்தில் உரிமை பெறுவதாகும்.

பெண்கள் பெற்றிருக்கும் இந்தச் சொத்துரிமை என்பது சட்டங்களால் மட்டும் முழுமை அடைந்து விடாது. ஆணாதிக்கச் சமுதாயம் சட்டத்தின் பல பிரிவுகளைப் பயன்படுத்தி பெண்களுக்கான சொத்துரிமையைப் பறிக்கின்றது. எனவே ஆண்களுக்கான மனமாற்றமே பெண்களுக்குச் சொத்துரிமை கிடைக்க வழிசெய்யும். எனவே பெண்ணியம், ஆண்களின் மன மாற்றத்திற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

### 3.3 தொகுப்புரை

3.3.1 உலகம் முழுவதும் உள்ள பெண்ணிய இயக்கங்கள் கல்வி, வேலைவாய்ப்பு, சமத்துவம் முதலியவற்றை முன்னிறுத்திப் போராட்டங்களை நடத்திவருகின்றன. பெண்ணியக் கோட்பாடுகள் பெண்களின் நிலை (Status), அதிகாரம் (Power), தன்னாட்சி (Autonomous) ஆகியவற்றின் அடிப்படையில் வகைகளாகக் கட்டமைக்கப்படுகின்றன.

3.3.2 பெண்களின்நிலை ஆணாதிக்கச் சூழலால், சமூகத்தில் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டே இருக்கிறது. ஆணாதிக்கச் சமூகத்தால் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டவை பெண்ணிலைக் கருத்துக்கள் என்பதையும்; இவை இல்லறம், சமயம், பண்பாடு, அரசு, அரசியல் முதலிய நிலைகளில் கட்டுப்பாடுகளை விதிப்பதையும்; கடுமையான போராட்டங்களின் மூலமே இதனை வெற்றி கொள்ள முடியும் என்பதையும் பெண்ணிய இயக்கங்கள் உணர்ந்து செயல்படுகின்றன.

3.3.3 ஆணிய சமுதாயத்தின் பணபாட்டுக் கட்டமைப்புகளுக்கு ஏற்ப பெண் வாழக் கட்டாயப்படுத்தப்படுவதும் பண்பாட்டு மீறல்களைப் பெண் கையிலெடுக்கும் பொழுது அதிர்வுகள் ஏற்படுவதும் பெண்ணியலாளர்களின் சவாலாக அமைகின்றன. சமயத் தலைவர்களாகப் பெண் பொறுப்பு வகிக்க முடியாத நிலையை ஆணியச்சிந்தனை கட்டமைத்துள்ளது.

எனவே ஆண்களைப் போலவே பெண்களும் தவத்தில் ஈடுபட்டு சமய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை பெண்விடுதலைக்கான போராட்ட வடிவங்களில் ஒன்றாகக் கொண்டனர். சமயச் சடங்குகள் மட்டுமின்றி தீட்டுக் கோட்பாட்டினால் கோவிலுக்குச் சென்று வணங்கும் உரிமை மறுக்கப்பட்ட பெண்கள், அதனை எதிர்த்துப் புரட்சி செய்துள்ளதை வரலாற்றில் பார்க்க முடிகிறது.

3.3.4 சமூகம் சார்ந்த பண்பாட்டு நடவடிக்கை பெண்ணை உடமைப் பொருளாக மட்டுமே பார்க்கின்றது. உடலமைப்பு நிலையில் பெண், சமூகத்தில் இரண்டாம் நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளதைப் பெண்ணிய-

வாதிகள் எதிர்த்துக் குரல் கொடுக்கின்றனர். சமூகத்தில் தனிப்பட்டவர்களாக அல்லாமல் சமூக உணர்வுள்ளவர்களாகப் பெண் வாழ வேண்டு என்பதையும் வலியுறுத்துகின்றனர். திருமணம் - இல்லறம் - திருமண முறிவு ஆகிய வாழ்வியற் கருத்துக்களில் பெண் தன்னியல்பாக, சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமை பெற்றவளாக விளங்கவேண்டும் என்பதைக் காரைக்காலம்மையார் போன்ற ஆளுமைகள் வழி உறுதி செய்கின்றனர்.

3.3.5 பெண்களுக்குக் காலங்காலமாக இழைக்கப்பட்டுவரும் புனிதம், ஒழுக்கம், குடும்ப கௌரவம், கற்பு முதலிய கற்பிதங்களின் அடிப்படையிலான கட்டுப்பாடுகள் உடைத்தெறியப்படவேண்டும் என்பதை இன்றையப் பெண்ணிய இயக்கங்கள் வழிமொழிந்து போராடி வெற்றி பெற்று வருகின்றன.

3.3.6 சமூகத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் எல்லா உரிமைகளும் பெற்று, சுதந்திரமாக வாழ, தோற்றம், செயல், கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்துத் தளங்களிலும் சமத்துவநிலை பேணப்பட-வேண்டும் என்பதை பெண்ணிய இயக்கங்கள் முன்வைத்துப் போராடுகின்றன. உலகப் பெண்களின் நிலையைவிட இந்தியப் பெண்ணியத்தின் நிலை தவம், நோன்பு நோற்றல், கற்பு முதலிய காரணிகளினால் இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஆணியச் சமூகத்தால் அவதூறுகளுக்கும் பொய்ப் பழிகளுக்கும் ஆளாகும் பெண்களுக்குச் சமத்துவம் தேடி பெண்ணிய இயக்கங்கள் போராடுகின்றன.

3.3.7 பெண்களின் சமத்துவநிலை, உணர்வுநிலை, கல்விநிலை, வேலைவாய்ப்பு ஆகிய நிலைகளின் அடிப்படையில் அமையவேண்டும் என்பது பெண்ணிய வாதிகளின் நோக்கமாக உள்ளது. ஆணின் உடற்பசிக்கான உடலாக மட்டும் பெண் பார்க்கப்படுவதால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகும் நிலை உண்டாகிறது. இதனால் ஆணுடனான பாலுறவை மறுத்து, உடல் அடிமைத் தனத்திலிருந்து வெளியேறுவதைக் கோருகிறது. மேலும் ஆணுக்கான வாரிசைப் பெற்றுத்தரும் இயந்திரமான

பணியைச் செய்வது மட்டும் பெண்களின் கடமை என்ற கருத்தை மறுக்கிறது.

3.3.8 பெண்கள், கல்வி கற்கும் உரிமையை ஆண் சமூகம் மறுதலித்தே வருகிறது. ஆணுக்கு நிகராக அறிவு வளர்ச்சியில் பெண் சமுதாயம் உயரவேண்டுவதையும் வெளிஉலகத்தோடு தொடர்பு கொண்டு சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதையும் பெண்ணிய இயக்கங்கள் முன் வைக்கின்றன. பாரதி, பாரதிதாசன், திலகபாமா போன்ற கவிஞர்கள் பெண்களுக்கான கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பாடியுள்ளனர்.

3.3.9 பெண்ணிய இயக்கங்கள் பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தையும் அவர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் வன்முறைகளையும் கொடுமைகளையும் வேலைவாய்ப்பும் பொருளாதாரமும் மாற்றிவிடும் என்பதையும் பெண்ணியச் சிந்தனைகளாக முன்வைக்கின்றனர். நீதித்துறை, கல்வித்துறை, பொதுப்பணித்துறை, பொறியியல் துறை, இராணுவம், காவல்துறை போன்ற எல்லாத் துறைகளிலும் பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர். இதனால் பெண்களின் ஒழுக்கத்தின் மீது கேள்விகளைத் தொடுக்கும் சூழலில் இருந்து விடுபட்டு, நம்பிக்கையுடனும் சுயமரியாதையுடனும் உழைக்கும் நம்பிக்கையை கனிமொழி, திலகபாமா போன்ற கவிஞர்கள் தம் கவிதைகளில் பதிவு செய்து வைத்துள்ளனர்.

3.3.10 ஆண்களின் சமூகம், பெண்கள் மீது உடல், உள்ளம் மற்றும் உணர்வு நிலைகளில் அதிகாரம் செலுத்துகின்றது. ஆணிய அதிகாரத்தினால் அச்சம் கொள்ளாமல் வலிமை பெற்றவளாகப் பெண் வளர வேண்டிய கட்டாயத்தைப் பெண்ணிய இயக்கங்கள் முன் வைக்கின்றன. குடும்பப் பொறுப்பை பெரும்பாலும் ஆண்கவனிக்கும் ஆணியச் சூழலில், பெண்ணுக்கான அதிகாரம் குடும்ப நிலையில் குறைந்தே உள்ளது. கல்வி, வேலை வாய்ப்புகளால் கிடைக்கும் பொருளாதாரச் சுதந்திரத்தால் பெண்ணுக்குச் சமநிலை கிடைக்கும் என்பதை திலகபாமா, சல்மா, தமிழச்சி தங்கப்பாண்டியன் ஆகியோர் தம் கவிதைகளில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

3.3.11 பெண்மைப் பண்பைக் கற்பிப்பதன் மூலம் உளவியல் ரீதியாக தாழ்வு மனப்பான்மையைப் பெண்ணுக்கு ஆண் சமூகம் உருவாக்கி வைத்துள்ளது. சமுதாயம் கற்பிதமாகச் செய்துள்ள பெண்ணடிமைப் பண்புகளிலிருந்து விடுதலை பெறும் உணர்வையும் அதன்மூலம் சமுதாய நிலையில் அதிகாரம் பெறுவதையும் பெண்ணியலாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். மேலும் கணவனை இழந்தால் கைம்பெண் என்கின்றனர்; மனைவியை இழந்த கணவனை எப்படி அழைக்க என்ற எதிர் நிலைப்பண்பாடு பேசுவதன்மூலம் சமூக அதிகாரம் பெற முயல்கின்றனர்.

3.3.12 பெண்கள், ஆண்களோடு இணைந்து சார்ந்து வாழ்ந்து பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும் என்பதும்; கருத்தியல் மற்றும் சொத்துரிமை ஆகியவற்றின் அடிப்படையில் ஆணுடன் சேர்ந்து பெண்ணும் வாழ முடியும் என்பதை நிறுவுவதும்; ஆணியச் சமூகத்தால் ஏற்படும் எத்தகைய இடர்ப்பாடுகளையும் கருத்துரிமை (பொருளியல் சுதந்திரம்) சொத்துரிமை ஆகியவற்றால் நீக்கிக் கொள்ள முடியும் என்பதையும் பெண்கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் பதிவு செய்துள்ளனர்.

# குறிப்புகள்

1. சு.சண்முகசுந்தரம் (தொ.ஆ.), பெண்ணியம். ஆய்வுக் கட்டுரைகள், ப.9.
2. நா. ஜெயபாலன், பெண்ணினம் ஓர் ஆய்வு, ப.15.
3. இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.14.
4. மேலது, ப.14.
5. நா. ஜெயபாலன், மு.நூ., ப.22.
6. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, பெண்ணும் பெண்மையும், ப.41.
7. கனிமொழி, அகத்திணை, ப.48.
8. மேலது, ப.48.
9. மேலது, ப.58.
10. தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை, ப.218.
11. வாசுகிஜெயரத்னம், பெண்ணியச் சுவடுகள், ப.42.
12. சு. சண்முகசுந்தரம் (தொ.ஆ), மு.நூ., ப.58.
13. மேலது, ப.58.
14. மேலது, ப.59.
15. மேலது. ப.59.
16. என்.கே. அழகர்சாமி, பெரியபுராணத்தில் திருக்குறளின் தாக்கம், ப.60.
17. அ. மாணிக்கனார் (உ.ஆ), பெரியபுராணம், ப.44.

18. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.96.

19. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.38.

20. தொ. பரமசிவன், பாரதிதாசன் பாடல்கள், ப.320.

21. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.39.

22. வாசுகிஜெயரத்தினம், மு.நூ., ப.42.

23. மேலது, ப.77.

24. மேலது, ப.78.

25. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி. மு.நூ., ப.44.

26. வாசுகி ஜெயரத்தினம். மு.நூ., ப.26.

27. மேலது, ப.27.

28. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.44.

29. மேலது, ப.43.

30. மேலது, ப.29.

31. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.28.

32. மேலது, ப.28.

33. ராஜமார்த்தாண்டன்(தொ.ஆ), காலச்சுவடு பெண்படைப்பாளர்கள் 1994-2004, ப.266.

34. வாசுகிஜெயரத்தினம், மு.நூ., ப.266.

35. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, தமிழ் நாவல்களில் பெண்ணியம், ப.62.

36. சல்மா, ஒரு மாலையும் இன்னொரு மாலையும், ப.17.

37. இரா. ரெங்கம்மாள், சி.வாசுகி, மு.நூ., ப.45.

38. நா.ஜெயபாலன், மு.நூ., ப.26.

39. மேலது, ப.26.

40. வாசுகி ஜெயரத்தினம், மு.நூ., ப.114.

41. மேலது, ப.114.

42. சந்திரகாந்தன் (தொ.ஆ), பாரதியார் கவிதைகள், ப.360.

43. நா. ஜெயபாலன், மு.நூ,. ப.16.

44. பாரதிதாசன், குடும்பவிளக்கு, ப.69.

45. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.104.

46. தொ. பரமசிவன் (தொ.ஆ)., மு.நூ., ப.231

47. திலகபாமா, எட்டாவது பிறவி, ப.88.

48. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.109.

49. வாசுகி ஜெயரத்தினம், மு.நூ., ப.125.

50. தமிழ்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம், ப.108.

51. நா. ஜெயபாலன், மு.நூ., ப.60.

52. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.76.

53. கனிமொழி, கருவறை வாசனை, ப.28.

54. நா. ஜெயபாலன், மு.நூ., ப.16.

55. வாசுகி ஜெயரத்னம், மு.நூ., ப.91.

56. நா. ஜெயபாலன், மு.நூ., ப.20.

57. மேலது, ப.20.

58. வாசுகிஜெயரத்னம், மு.நூ., ப.20.

59. மேலது, ப.105.

60. மேலது, ப.106.

61. திலகபாமா, சூரியாள், ப.37.

62. சல்மா, மு.நூ., ப.27.

63. சல்மா, பச்சைத்தேவதை, ப.16.

64. தமிழச்சி தங்கப்பாண்டியன், வனப்பேச்சி, ப.76.

65. நா. ஜெயபாலன். மு.நூ., ப.15.

66. சு. சண்முகசுந்தரம் (தொ.ஆ), பெண்ணியம், ப.4.

67. மேலது, ப.4.

68. மேலது, ப.15.

69. ராஜமார்த்தாண்டன்(தொ.ஆ), மு.நூ., ப.317.

70. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி.), எத்திராஜ் மகளிர் கல்லூரி, மு.நூ., ப.48.

71. மேலது, ப.126.

72. ராஜமார்த்தாண்டன்(தொ.ஆ), மு.நூ., ப.319.

73. திலகபாமா, மு.நூ., ப.29.

74. கனிமொழி, அகத்திணை, ப.31.

75. மேலது, ப.15.

76. இரா.ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.47.

77. மேலது, ப.41.

78. மேலது, ப.48.

79. ராஜமார்த்தாண்டன்(தொ.ஆ), மு.நூ., ப.321.

80. தமிழச்சி தங்கப்பாண்டியன், மு.நூ., ப.64.

81. சல்மா, மு.நூ., ப.48.

82. திலகபாமா, எட்டாவது பிறவி, ப.86.

83. இரா.ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.49.

84. மேலது, ப.50.

85. சு. சண்முகசுந்தரம (தொ.ஆ). மு.நூ., ப.17.

86. இரா.ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.47.

87. மேலது, ப.47